929

25 AUG 1922

ரேஜிஸ்தர் எம். 916.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை

வேதாந்த விசாரம் செய்யும்

ஓர் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை

கடாஹர் ஸ்ரீநிவாஸாசார்யர் பி.ஏ., பி.எல்.
பத்திராதிபர்.
பி. ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் பி.ஏ., பி. எல்.
ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் காரியதர்சி.

ஸம்புடம் 12.] துந்துபி௵ சித்திரை௴ [ஸஞ்சிகை 7.

1. கார்யதர்சியின் விக்ஞாபனம்
காரியதரிசி ... ... ... ... ... 193
2. பத்ராதிபரின் குறிப்புக்கள் ... ... ... ... 194
3. புஸ்தக விமர்சம்
பத்ராதிபர் ... ... ... ... ... 203
4. ஸ்தோத்ரங்களில் சில அதிவாதங்கள்
ப்ரமாண ஸாரணர் ... ... ... ... 206
5. கடிதங்கள் ... ... ... ... ... 209
6. கீதையும் ஸ்ரீபாஷ்யகாரரும்
பத்ராதிபர் ... ... ... ... ... 25

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சியால்

ப்ரசுரம் செய்யப்பட்டது.

மதிராஸ் : கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

வருஷசந்தா ரூ. 3—0—0] [ஸஞ்சிகை 1 அணா 4.

## அறிக்கை.

பத்திரிகைக்கு விஷயங்கள் எழுதுவதும், கடிதங்கள் அனுப்புவதும் கட்டணம் கட்டுவதும் விலாஸமாறுதல்கள் அறிவிப்பதும் மற்றெல்லா விஷயங்களும் "ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸபையின் கார்யதர்சி பர்ணசாலை எழும்பூர் மதிராஸ்' என்கிற விலாஸத்திற்கு அனுப்பவேண்டும். 20 ரூபாய்க்கு மேற்பட்டதுகைகளுக்கு ரசீது அனுப்பப்படும்.

தீபிகையின் சந்தாதாரர்கள் கார்யதர்சிக்கு எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் மணி ஆர்டர் கௌபான்களிலும் மாதாந்தரம் தங்களுக்குக்கிடைக்கும் தீபிகையின் மேல்விலாஸத்தில் தங்கள்பெயர் ஆரம்பிக்கும் இடத்தில் குறித்திருக்கும் தங்களுடைய பேரேட்டு நம்பரைக்குறித்து பிறகு ஸங்கதிகளை எழுதினால் சந்தாதாரர்களைக் குறிப்பிட்டு அறிந்துகொள்ள கார்யதர்சிக்கு அனுகூலமாயிருக்கும் என்கிற விஷயத்தைக் கார்யதர்சி அறிவிக்கிறார்.

சென்ற ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, இந்த மாதங்களின் ஸஞ்சிகைகள் ஸபையால் அச்சிடப்பட்ட காபிகள் எல்லாம் செலவழிந்து விட்டபடியால் புதியதாய் சேரும் ஸபையின் அங்கத்தினர்களுக்கும் சந்தாதாரர்களுக்கும் அந்த மாதங்களின் ஸஞ்சிகைகளை அனுப்ப ஸாத்தியப்படாது என்பதை கார்யதர்சி தெரிவிக்கிறார்.

### மார்ச்சுமீ த்திய சந்தா வரவு (தொடர்ச்சி.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்ரீ. உப. | கே. நரஸிம்மய்யங்கார், குவலாலம்பூர் | ... | 3 | 0 | 0 |
| ,, | எஸ். ரங்காசாரியர், தஞ்சாவூர் | ... | 3 | 0 | 0 |
| ,, | ஸி. ராகவாசாரியார், சென்னை | ... | 3 | 0 | 0 |
| ,, | பி. எஸ். ராகவாசாரியார், வேலூர் | ... | 3 | 0 | 0 |
| ,, | எம். ரத்தினஸாமிஅய்யங்கார், சித்தம்பூர் | ... | 3 | 0 | 0 |
| ,, | வித்வான் ஸ்ரீரங்காசாரியர், வெங்கரை | ... | 3 | 0 | 0 |
| ,, | அர்ச்சகம் ரங்கஸாமிபட்டர், ஸ்ரீரங்கம் | ... | 3 | 0 | 0 |
| ,, | எ. திருமலைஅய்யங்கார், நாகப்பட்டணம் | ... | 3 | 0 | 0 |
| ,, | ஸாமி ரங்கஅய்யங்கார், வீரவநல்லூர் | ... | 3 | 0 | 0 |
| ,, | என். ஆர். ஸ்ரீனிவாஸராகவஅய்யங்கார், கும்கோணம் | | 3 | 0 | 0 |
| ,, | என். ஸ்ரீனிவாஸாசாரியார், புரசைவாக்கம் | ... | 5 | 0 | 0 |
| ,, | வி. தேசிகாசாரியர், புரசைவாக்கம் | ... | 10 | 0 | 0 |
| ,, | எஸ். வி. ரங்காசாரியர், விழுப்புரம் | ... | 3 | 0 | 0 |
| ,, | கே. வி. வெங்கடாசாரியர், நாமக்கல் | ... | 5 | 0 | 0 |
| ,, | ஏ. ரங்காசாரியர், கொட்வாசல் | ... | 3 | 0 | 0 |
| ,, | ஆர். ஸ்ரீனிவாஸஅய்யங்கார், தர்மபுரி | ... | 3 | 0 | 0 |
| ,, | வி. துரைசாமி அய்யங்கார், ஆர்ணி | ... | 3 | 0 | 0 |
| ,, | வி. வி. ஸ்ரீனிவாஸாசாரியர், திருநெல்வேலி | ... | 3 | 0 | 0 |
| ,, | எஸ். சக்கிரபாணி அய்யங்கார், விசலூர் | ... | 3 | 0 | 0 |
| ,, | ஏ. ஆர். ஆராவமுத அய்யங்கார், கும்பகோணம் | ... | 3 | 0 | 0 |
| ,, | பி. தேசிகாசார்யர், சேலம் | ... | 3 | 0 | 0 |
| ,, | ஏ. வி. ராமஸ்வாமி அய்யங்கார், புதுச்சேரி | ... | 3 | 0 | 0 |
| ,, | டி. குமாரஸாமி செட்டியார், சேலம் | ... | 3 | 0 | 0 |
| ,, | ஆர். நரஸிம்மய்யங்கார், மைலாபூர் | ... | 5 | 0 | 0 |
| ,, | பி. துரைஸாமி அய்யங்கார், சென்னை | ... | 5 | 0 | 0 |
| ,, | எஸ். கிருஷ்ணஸாமி அய்யங்கார், விஜயபுரம் | ... | 5 | 0 | 0 |
| ,, | கே. ஸ்ரீனிவாஸராகவ அய்யயங்கார், ஹைடயூர் | ... | 3 | 0 | 0 |
| ,, | டி. கே. நம்பி அய்யங்கார், மைலாபூர் | ... | 3 | 0 | 0 |

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., பி.எல்.

கார்யதர்சி:—பி. ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 12.] துந்துபி௵ சித்திரைமீ [ஸஞ்சிகை 7.

" த்ரிபுவனகமனம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் தததானே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ "

[ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## கார்யதர்சியின் விக்ஞாபனம்.

ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் அபிவிருத்திக்காக சென்ற பதினொரு வருஷங்களாய்நமது ஸபை வேதாந்த தீபிகைப் பத்திரிகையின் மூலமாயும் பண்டித உபந்யாஸங்கள் மூலமாயும் உழைத்து வருவது தீபிகாமானிகள் எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் கலா பேதங்கள் ஏற்பட்டு அதனால் பரஸ்பரம் உண்டாயிருக்கும் வைஷம்யத்தைத் தீர்க்க வேண்டுமென்பது ஸபையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. இதை உபயகலா பண்டித சிகாமணிகளும் அறிந்திருக்கிறார்கள் என்பது வருஷாந்தத்தில் கூடும் இச்சபையின் வார்ஷிக மஹோத்ஸவங்களில் ஒற்றுமையுடன் அவர்கள் நடத்திவரும் உபந்யாஸங்களால் ஸகலருக்கும் விளங்கும். ஆகையால் இச்சபையை அபிவிருத்திசெய்து தழைக்கச்செய்வது ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸம்பிரதாயிகளான ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களையும் பொறுத்த கடமை.

அப்படியிருந்தும் ஸபையின் அங்கத்தினர்களில் அநேகர் நாளது வருஷத்திய சந்தாவை வருஷம் ஆரம்பமாகி 6-மாதங்கள் கழிந்தும் செலுத்தாமலிருக்கிறார்கள்.



186714

1920-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் கூடிய நிர்வாஹ ஸபையாருடைய ஒரு கூட்டத்தில் அச்சபையார் வேதாந்த தீபிகைப்பத்திரிகையை அச்சிட்டுப் பிரசுரம் செய்யும் வருஷச் செலவு சந்தாக்களினால் வசூலாகுந் தொகையை மீறி நூற்றுக்கணக்காக அதிகப் படுவதால் அவ்விதமான குறைவை நிவ்ருத்தி செய்ய "வேதாந்த தீபிகையின் சாசுவத நிதி" என்று ரூ. 10,000 (பத்தாயிரம்) ரூபாய் பண்டு ஒன்று ஏற்படுத்தி அதின் வட்டியின் மூலமாய் தீபிகையை நஷ்டமில்லாமல் நடத்த முயல வேண்டியது அவசியமான அம்சம் என்று தீர்மானித்தது தீபிகாபிமானிகளுக்குத் தெரிந்திருக்கலாம். அந்த முயற்சி இதுவரையில் நிறைவேறாம லிருப்பதை ஞாபகப்படுத்துவதுடன் தீபிகாபிமானிகளாயும் இராமாநுஜ ஸித்தாந்தாபிமானிகளாயு மிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் யாவரும் இந்த கைங்கரியத்துக்காகத் தங்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தபடி சாஸ்வத நிதியை அபிவிருத்தி செய்ய திரவியத்தைக் கொடுத்து ஸபையின் முயற்சியை நிறைவேற்ற வேண்டுமென்று விநயத்துடன் பிரார்த்திக்கிறேன்.

நாளது வருஷம் ஏப்ரல்மீ 24-ம் தேதி முதல் தபால் சார்ஜும் இரட்டித்து விட்டது. அந்த அம்சத்தை தீபிகாபிமானிகள் அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

காரியதரிசி.

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

'ஶரீர பொஷணாயீ்ஸௌ யகூதாநு் ஜிஹ்ருக்ஷதெ । ரூராஹு் ஷாாயிபா யூககா நக்ஂ தத்ஂ ஸ ஜஹ்ரூதி ॥ ஶோஹவஸ ஹோசூ் தூஂ ஸ்ஸாகெூா வர்வாஷிஷ்ு । ஶொஹோ விநிஜி்தா வந ஸஸ்ூ கி வடிஹர்தி ॥ ஶோஹு் ஜஹி ஹாசூஂ தெஹாாா ஸதாஷிஷ்ு । யஂஜிகா ஸ்நயொ யாஜி தஜிஷொ: வாஸு் வடீு ॥' (சரீர போஷணத்திலேயே நோக்காக யிருந்து கொண்டு ஆத்ம ஸாக்ஷாத்காரத்தையடைய அபேக்ஷிப்பவன், முதலையை மரக் கட்டையென்று ப்ரமித்து அதைப் பிடித்துக்கொண்டு ஆறு கடக்க யத்தனிப்பவனுக் கொப்பாவான். மோக்ஷத்தை அபேக்ஷிப்பவனுக்கு தேஹாதிகளில் உண்டாகும் மோஹமே மஹா ம்ருத்யுவாம். மோஹத்தை வென்றவனே முக்தி மார்க்கத்துக்கு அர்ஹனாவான். ஆகையால் உடம்பு, பெண்டிர், மக்கள், முதலியவர் திறத்தில் உண்டாகும் மயக்கத்தை ஒழித்துவிடு. இம்மயக்கத்தை ஜயித்த முனிகளே பரமப்ராப்யமான ஸ்ரீவிஷ்ணுவினுடைய பதத்தை யடைவார்கள்)' என்று விவேக சூடாமணி என்னும் க்ரந்தத்தில் ஸ்ரீசங்கராசார்யர் கூறியுளர். இவற்றிலுள்ள நீதிகள் பகவத்ராமா[illegible]ஸாரிகளுக்கும் உபாதேயங்கள் தான்.

[illegible stamp]



பரமப்ராப்யமான தேவன் ஸ்ரியஃபதி என்பதை இவர் இங்கு தெளியக் காட்டினர். இவர், தத்வநிரூபணத்தில் மாத்திரம் வேறுபட்டாரே யொழிய, வைதிகமதாவலம்பியாகையால், இவரை வைஷ்ணவரென்றே கொள்ளக்குறையில்லை. 'விஷ்ணுவின் பரமபதம்' என்றது இவர் கருத்தில் அத்வைதஜ்ஞானம் உண்டான தசையாகும். 'ப்ரும்மமும் நானும் ஒன்று' என்னும் அனுபவ ரூபமான அறிவு (சுவமதி) அல்லவோ அத்வைத மதத்தின் மோக்ஷம்! பரமபதமென்பது அப்ராக்ருதமான ஸ்ரீவைகுண்டமென்னும் தேஶ விஶேஷமென்றும், அங்கு ஸர்வேசன் திவ்யரூப விஶிஷ்டனாய் நித்யமாய் எழுந்தருளியிருக்கிறான் என்றும், முக்தர்கள் அங்கு சென்று நித்யர்களுடன் வாசி தெரியாதபடி கலந்து ப்ரும்மாநந்தம் பெற்று ஸர்வத் கைங்கர்ய ரஸிகர்களா யிருப்பாரென்றும், இதுதான் மோக்ஷமென்று வேதாந்தங்கள் அறுதியிடுகின்றன வென்றும், நமக்குபதேசம். இதை ஸ்ரீசங்கராசார்யர் மறுப்பதில்லை. ஆனால் 'ஆத்மைக்ய பொ ய' மானது இதற்கு மேற்பட்டது என்பர். 'இப்பக்ஷத்துக்கு வேதப்ரமாணமில்லை; வேத விரோதமுண்டாம்; இது ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களுக்கு முரண்படுகின்றது; தர்க்கானுமானங்களினால் பாதிக்கப் படுகின்றது; நம்முடையவர் பக்ஷத்தில் இவ் வனுபவபத்திகளொன்று மில்லாமல் ஶாஸ்த்ரார்த்தங்கள் புலப்படுகின்றன'; என்பது நமது பரம்பரையான ஸித்தாந்தம்.

இதுநிற்க, வைஷயிக ஸுகத்திலேயே ப்ரவணனாயிருப்பான் வாஸ்தவமான முமுக்ஷுவாகக் கூடாதென்றது ஸர்வஸம்மதமான விஷயம். 'ஶோஂஸாஸூக்ஸ்ருய விண்டுத்ருஸாயு ஜாஸ்ஸிஸஂ ஹதள । தெஹெவதீ் கிபாு ஸ்ஜொ ஸவிதா நாகெவ்யஸள ॥' (மாம்ஸம், ரக்தம், சீ, மலமூத்ரங்கள், நரம்பு, தசை, எலும்பு, முதலியவைகளின் சேர்க்கையினாலுண்டான தேகத்தில் ஐக்ய புத்தியைப் பண்ணும் மூடனுக்கு நரகத்திலும் அவ்விசைவுண்டாகக் குறையில்லை) என்றார் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான். இதின் வ்யாக்யானத்தில் 'மேலும், நரகத்தில் அனுபவிக்கப்படும் மலமாம்ஸாதிகள் தனக்குப் புறம்பேயுள்ளவை; இங்கு அவைகளின் ஸங்காதமாகிய ஶரீரத்தையே ஹோக்ய மென்று நினைக்கிறான்; ஆகையால் இதைவிட நரகமே மேலாயிற்றுப் போலும்!' என்று ஸ்ரீவிஷ்ணுசித்தர் அருளிச் செய்தார். இத்தகைய ஶரீரத்தின் போஷணையையும் அதன் மூலமாயுள்ள போகங்களையும் ஸ்வயம் ப்ரயோஜனமாக நாடுமவன் 'ஸஂஶாத் ஸஂஜாயதெ காஃ காமாத் க்ரொயொஜாயதெ' (விஷயஸங்கத்தினால் அதில் ஆசை உண்டாகின்றது; அது கிட்டாவிடில் அதனின்றும் கோபம் ஜனிக்கின்றது) என்று துடங்கி ஸ்ரீகீதாசார்யன் நிந்தித்த அனர்த்த பரம்பரைகளிலிழிந்து முடிவில் 'ப்ரணஶ்யதி' (நாசமடைகிறான்) [illegible] நசையை யடைவான். இங்கு நாஶமாவது ஆத்மலாபத்தை யடையு [illegible]

ஸம்ஸாரஸாகரத்தில் ஆழ்ந்து நசிப்பதுதான். ‘புருஷார்த்த யோக்யதையை இழப்பது’ என்று ஸ்ரீசங்கராசார்யரின் வ்யாக்யானம். பிறப்பிறப்புப் பசிபிணி மூப்புத் துன்பங்கள் நிரம்பிய ஸம்ஸாரஸமுத்ரத்தில் வினையுடம்பிற் கட்டுண்ட ஆத்மாவை ‘மொய்மாம்பூம்பொழிற் பொய்கை முதலைச் சிறைப்பட்டு நின்ற கைம்மாவுக்கு’ ஸமானமாய் நம்பூர்வாசார்யர்கள் நிர்வஹிப்பார்கள். ‘அப்பாடுபட்ட ஸ்ரீமஜேந்த்ராழ்வானுக் கருள்செய்தபடியே அடியேனையும் இங்கிருந்து சிறைமீட்டுன் தாளிணைக் கீழ்க்கொள்ளாய்’ என்னும் ப்ரார்த்தனையையுட்கொண்ட ‘ஸ்ரீமத்ஸுஷ்ட மஜேந்த்ர’ என்று துடங்கும் ஸ்தோத்ரத்தைத் தினந்தோறும் அதிகாலையில் நித்திரை நீங்கியவுடன் அநுஸந்தித்துக் ‘கார்முகில் போல் வண்ணன் கண்ணனெம்மானைச் சொல்லிப்பாடி’ உய்யுமாறு ஸ்ரீவைஷ்ணவர்களுக்குபதேசித்தார்களிறே! ஆகையால் ‘ஸ்ரீமத் ஶாஸ்த்ரயியா யூகா’ என்றதும் உபபந்நமாயிற்று.

இப்படித் தேஹ ஸம்ரக்ஷணாதிகளி லீடுபடுவது மோஹத்தினால் என்றார். இம்மோஹமே ‘மோஹாந்த்ய:’ என்றும் சொன்னார். மோஹம் என்பதின் பொருள் இவர் நினைவில் மித்யை, (இல்லாதது), அஸத்யம் (பொய்யானது) என்றாகும். ‘தஸ்மாத்விஜ்ஞாநாதந்யத் கிஞ்சித் க்வசித் கதாசித் த்விஜ வஸ்து ஜாதம்’ (ஆகையால் ஓ ப்ராம்மணரே, எங்கும் எக்காலத்திலும் விஜ்ஞானம் என்னும் ஆத்மாவைவிட வஸ்து வேறொன்றுமில்லை) என்னும் ஸ்ரீவிஷ்ணுபுராண வசநத்துக்கு முதற்பார்வையில் தோன்றும் அர்த்தத்தை யநுஸரித்துச் சரீராதி வஸ்துக்களெல்லாம் உண்மையில் இல்லாதவைகள், ப்ராந்தியினால் உள்ளவையென்று கருதப்படுகின்றன வென்பார். ‘அநாத்மந்யாத்ம விஜ்ஞாநம் ஶப்தோவா ப்ராந்திலக்ஷணம்’ (ஆத்மாவல்லாத வஸ்து விடத்தில் ஆத்மா என்னும் புத்தியைப் பண்ணுவது அல்லது சப்தத்தை உபயோகப் படுத்துவது ப்ராந்தியின் லக்ஷணம்) என்று அதேபுராணத்திற் கூறப்பட்டுள்ளது. ஆகையால் மோஹமென்பது உண்மையில் இல்லாததை இருப்பதாகப்ரமிப்பதன்று. ஆனால் யதார்த்தமாகவே இருக்கும் ஒரு வஸ்துவைச்சில தோற்றங்களினால் யதார்த்தமான மற்றொரு வஸ்துவென்று தப்பாக நினைப்பது ப்ராந்தி. இவ்விடத்தில் வரும் மோஹம் யாதெனில் அநித்யமாய் விவேகிகளுக்கு அருவருப்பாய்த்தோன்றும் அழுக்குடம்பையே அஹங்காரத்தால், நித்யமாய் நிர்மலமாய் ஜ்ஞாநாகாரமாயிருக்கும் ஆத்மா வென்று மயங்குதலாம். இதை ஸ்ரீதேசிகன் ‘வினையுடம்பிற் கூறுபடும் கொடுமோஹம்’ என்றருளிச் செய்தார். சரீரத்திலுண்டாகும் துரபிமானத்தால் ஆத்மஹாநியைத்தேடும் மந்த புத்திகளைக்குறித்துக் ‘கொண்டாட்டும் குலம்புனைவும் தமருற்றார் விழுநிதியும், வண்டார் பூங்குழலாளும் மனையொழிய வுயிர்மாய்த்தல், கண்டாற்றேனுலகியற்கை



கடல்வண்ணா’ என்றபடியே உலகத்தார் மாளும்போதும் கூடத்தம்மைப்பிறர் கொண்டாடுவதையும், தம் உயர் குலத்தையும், பந்துக்களையும், பெருஞ்செல்வத்தையும், பூங்குழற் கண்ணாட்டியையும், அழகிய பங்களாக்களையும் விட்டுப் போவதற்கழுவாரே யன்றி உன்திறத்துப் படவில்லையே’ என்று ஆழ்வார் எல்லையிலந்நலத்தெம் பெருமானைக்கூவி வருந்தினார்.

இப்படி இன்றியமையாத இந்திரிய ஜயத்தைப் பெறுவதற்குபாயம் தத்வ ஜ்ஞாந பூர்வமாக ஸர்வகர்மங்களினின்றும் ஒழிந்து நிற்கைதான் என்று ஸ்ரீசங்கராசார்யர் நிர்வஹிக்கின்றார். ப்ரஹ்மமும் ஆத்மாவும் ஒன்று என்னும் அறிவு தத்வ ஜ்ஞாநம். இப்படி யறிந்தவனுக்கு ‘மோக்ஷஸ்யஹேது: ப்ரதமோ நிகத்யதே வைராக்ய மத்யந்த மநித்யவஸ்துஷு । தத: ஶமஶ்சாபி தமஸ்திதிக்ஷா ந்யாஸ: ப்ரஸக்தாகில கர்மணாம்ப்ருஶம் ॥’ (அத்யந்தம் அநித்யமான வஸ்துக்கள் திறத்தில் வைராக்யமடைவது மோக்ஷத்துக்கு முதற்படியான ஸாதநம். அதிலிருந்து வெளி இந்திரியங்களையும் மனதையும் ஜயித்தல், ஸுக துக்காதிகளினால் மாறுபடாதிருத்தல், முதலிய தசைகளைப்பெற்று அதிவேகமாக ஸகலகர்மங்களையும் விட்டுத் துறப்பது தான் மோக்ஷகாரணம்) என்றார். முமுக்ஷுவுக்கு வைராக்யம் அத்யந்தம் அவஶ்யம் என்பதை யாரும் மறுப்பதில்லை. அதை எப்படி யடைவது என்று ஸரியாய் அறியவேண்டும். ஒருகார்யமும் செய்யாமலிருப்பதால் இந்திரியத்தை ஜயிப்பது என்பதுஸாத்யமில்லை. ஜ்ஞாநயோகத்திலிழிந்து விட்டால் ஏன்முடியாது என்று மயங்கின அர்ஜுநனை நோக்கி ஸ்ரீபகவான், ‘கர்மத்தைத் துடங்காம லிருப்பதினாலேயே ஜ்ஞாந நிஷ்டை வந்துவிடாது ........ க்ஷணகாலமேனும் எவனும் ஒன்றும் செய்யாமல் இருக்கிறான் என்பதில்லை. ஏனென்றால் ப்ரக்ருதியின் குணங்களில் அகப்பட்டுத் தன்னையறியாமலே ஏதாவது செய்துகொண்டே யிருக்கிறானே! இவன் கர்மேந்திரியங்களை மாத்திரம் அடக்கி ஜ்ஞான நிஷ்டையி லிழியப்பார்த்தால் இவன் மனது விஷயங்களையே ஸ்மரித்தவண்ணமா யிருந்து ஒன்று நினைக்க ஒன்று கூடுவதுபோல் நிஷ்டையை யிழந்து விடுவதுமல்லாமல் இவன் ஆசாரமும் பொய்யாய்விடும்’ என்று அருளிச்செய்தான். பரமாத்ம விஷயத்தில் ப்ரீதியும், மற்றவைகளில் வைராக்யமும் உண்டாக நாம்பற்றவேண்டிய உபாயத்தை அடுத்தாப்போல் ‘யஸ்த்விந்த்ரியாணி மநஸா நியம்யாரபதேர்ஜுந । கர்மேந்த்ரியை: கர்மயோகமஸக்த: ஸ விஶிஷ்யதே ॥’ (யாதொருவன் தன் புலன்களை மனதினால் கட்டுப்படுத்தி நிர்மலமான அந்தக்கரணத்துடன், சாஸ்த்ரங்களில் விதித்தபடி பகவதாராதன ரூபமாகக் கர்மங்களைச் செய்துகொண்டே அவற்றின் பலங்களில் ஆசையைவிட்டுக் கர்மயோகத்தி லிரங்குகிறானோ அவனே மேற்பட்டவன்) என்று உபதேசித்தான். ஜ்ஞாந நிஷ்டனும்கூட அபேக்ஷித பலம் கிட்டும்வரையில் சரீரத்தை தரிக்க வேண்டுமே! அதற்கு ஆஹாரம் ஸம்பாதிக்க வேண்டுமே! ஆகையால் இவன் நிஷ்டை குலையாம லிருக்கும்படி

ருட்டு ஆஹாராதிகளுக்காக ந்யாயமான வழிகளில் த்ரவ்யம் ஸம்பாதிக்க வேண்டும்; ஸாத்விக ஆஹாரங்களையே பகவானுக்கு நிவேதனம் செய்து உட்கொள்ள வேண்டும். இதன் பொருட்டு லௌகிக வ்யாபாரங்களையும் வைதிக கர்மங்களையும் செய்யவேண்டியது அவஶ்யமாயிற்று. தத்வ விவேகத்தினுல் வினையும் பயன் என்னவென்றல்:—'விசித்ரா தேஹஸம்பத்திரீஶ்வராய நிவேதிதும்' என்றபடி இந்த ஆர்சர்யமான அமைப்புடன் கூடிய ஶரீரத்தை ஈச்வரன் கொடுத்தது அதை அவன்திறத்தில் உபயோகப்படுத்துவதற்கே என்று தெளிந்து, இந்திரியங்களை அயோக்ய விஷயங்களிலிருந்து திருப்பி அவன் விஷயத்தில் ப்ரவணமாக்கி, நாம் செய்யும் ஒவ்வொரு ப்ரவ்ருத்தியையும் அவனுராதனத்துக்குச் ஶேஷபூதங்கள் என்னும் நினைவுடன் லோகயாத்ரையை நடத்துவோமானுல், பரமபுருஷார்த்தத்துக் குபயுக்தமான கீழ்ச்சொல்லிய வைராக்யம் அவன் க்ருபையினுல் தானே அநாயாஸமாக வந்துவிடும் என்பது தான்.

வேதாந்தமதம் துரவறத்தைப் பெரிதாகக்காட்டி நம்மை ஐஹிகவ்யாபாரங்களில் நபும்ஸகர்களாக்கிவிட்டதென்னும் சில ஆதுநிகர்களின் கக்ஷிகளைத் தீபிகையில் ஏற்கனவே விமர்ஶித்திருப்பதையும், அவர்களுக்கு ஸ்ரீசங்கராசார்யரின் கொள்கைகள் ஒருவாறு இசைந்திருப்பதாகக் காணப்படுவதையும் நம் நேயர்கள் அறிவார்கள். அவ்விமர்ஶங்களிற் கூறியுள்ளவைகளையும் இங்கு சேர்த்துக் கொள்ளவேண்டுகின்றோம்.

'மயி ஸர்வாணி கர்மாணி ஸந்ந்யஸ்யாத்யாத்மசேதஸா । நிராஶீர் நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வர: ॥' (நீசெய்யும் கார்யங்களையெல்லாம் எனக்குச் ஶரீரபூதனுய் என்னுல் நியமிக்கப்பட்டவனுய் என் ப்ரீதிக்காகச் செய்வதாய் த்யாகத்துடன் செய்து, அக்கர்மங்களின் பலங்களில் ஆசையையும் அஹங்காரத்தையும் விட்டு மனதில் ஒருவிதமான ஸந்தாபமும் இல்லாமல், உன் தர்மமாகிய யுத்தாதிகளைச்செய்) என்று, ஸ்ரீக்ருஷ்ணன் உபதேசித்ததை யுட்கொண்டு, இன்புறு மிவ்விளையாட்டுடையானுகிய எனையாளுமீசன் செயலென்று நல்வழியில் இல்லறம் நடத்துவோர்களே அனுதிகர்மத்தினுலடைந்த பிறப்பும் இறப்புமாகிய ஸம்ஸார பந்தத்திலிருந்தும் எளிதில் மோக்ஷம் பெறுவார்கள் என்றதாயிற்று. 'அத்யாத்மசேதஸா' என்பதற்கு 'அஹம் ஈஶ்வராய ப்ருத்யவத் கரோமி இத்யநயா புத்த்யா' (நான் ஈஸ்வரனுக்குக் கிங்கரனைப்போல் செய்கிறேன் என்னும் புத்தியினுல்) என்று ஸ்ரீசங்கராசார்யர் வ்யாக்யாநம் செய்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

* * * * *

சென்னை மாகாண ராஜாங்க நிர்வாஹத்தில் வருஷாந்த வரவு செலவுத்திட்டத்தில் ஸம்ஸ்க்ருத வித்யையின் பொருட்டு அதிகக்குறைவான தொகையே ஒதுக்கி வைக்கப்பட்டு வருகின்றது. நிகழும் வருஷத்தின் திட்டம் ஜு-



9000-க்கும் மிகவும் குறைவாயிருக்கின்றது. இப்படியிருந்தும் சட்டசபையில் சென்ற மாதம் நடந்த நடவடிக்கையில் சென்னை ஸர்வகலாசாலையின் (University) ப்ரதிநிதியானவர் இதையும் ஒதுக்கிவைக்கக் கூடாதென்றும், ஒரு ஜாதியாருக்கென்று ஏற்பட்டிருக்கும் வித்யாலயங்களுக்காகப் பொது ஜனங்களின் பணத்தைச் செலவிடக்கூடாதென்றும் வாதித்தார். இதைப்பற்றிச்சர்ச்சை துடங்குமுன் வித்யா இலாகா மந்திரியானவர் ஸர்க்கார் உதவிபெறும் ஸம்ஸ்க்ருதக் கலாசாலைகளில் ப்ராம்மண இதரர்களும் படிக்கின்றார்கள் என்றதின் பேரில் மேற்படி ப்ரதிநிதியானவர் தமது ப்ரேரணையை வற்புறுத்த வில்லையாம். இவையெல்லாம் ஏற்கனவே பத்ரிகைகளில் வெளிவந்திருக்கின்றன.

நம் மாகாணத்தில் நிகழ்ந்து வரும் நப்ராம்மணப்ரசாரத்தின் பரிணமனத்தில் ஸம்ஸ்க்ருத த்வேஷம் ஒன்றென்று ஏற்படுகிறது. இந்தியாவில் தமிழ் நாடு நீங்கலாக மற்று உலகமெங்கும் ஸம்ஸ்க்ருத வித்யையின் அருமையையும் பெருமையையும் கொண்டாடுகின்றார்கள். வெகு ப்ரயாஸத்துடன் மிகுந்த பணம் செலவு செய்து இவ்வித்யையைப் பரவச் செய்கின்றார்கள். கல்கத்தாவிலும் பம்பாயிலும் ஸர்வகலாசாலைகள் ஏற்பட்ட முதல் அவ்விடங்களில் ஸம்ஸ்க்ருதத்தை எல்லா மாணவர்களும் கற்கவேண்டிய கட்டாய வர்க்கத்தில் (Compulsary subject) சேர்த்திருக்கிறார்கள். சென்னையில் அதுவெகுகாலமாய் இஷ்டப்படி படிக்கும் பாஷை (Optional) இருந்து சில வருஷங்களாய், இந்தத் தரையையும் இழந்து விட்டது. அடியோடு எடுபட்டு விடும்படியான சில ஆலோசனைகள் ஸெனேட்டு (Senate) ஸபைக்குபதேசிக்கப் பட்டிருக்கின்றது. இவற்றைப்பற்றி மேற்படி ஸெனேட் ஸபையின் வரப்போகிற கூட்டத்தில் விவாதம் நடக்கும். அது எப்படி முடிவுபெறுமோ என்று மிகக்கவலைப் படுகின்றோம். ஸர்வகலாசாலையின் ப்ரதிநிதி சட்டச்சபையில் இப்படிப் பேசியது ஆலோசித்ததுமென்பது நமது துணிவு. நப்ராம்மணர்கள் தமக்கும் ஸம்ஸ்க்ருதத்துக்கும் ஸம்பந்தமில்லை யென்று நினைப்பது மிகவும் குறுகிய புத்தியைக் காட்டுகின்றது. தமிழ் பாஷையுட்பட நம்தேசத்தின் எந்தப் பாஷைக்குத்தான் ஸம்ஸ்க்ருத ஸம்பந்தம் அவஶ்யமில்லாம லிருக்கின்றது? அல்லது ஏற்றத்தைக் கொடுக்கவில்லை? கல்விக்களஞ்சிய மென்றால் ஸம்ஸ்க்ருத இலக்கண இலக்கிய க்ரந்தங்களைவிட்டு இனி எங்கு காணலாம்? தொன்று தொட்டுள்ள நம் நாட்டின் சரித்ரங்களும், சிறந்த கோட்பாடுகளும், ஶாஸ்திரங்களும் பயிற்சிகளும், நமக்கு எப்படிக்கிட்டின? நிற்க, இக்கல்வி பார்ப்பனர்க்கே யுரியவை யென்றாலும், அதற்குஸர்க்காரப் பணம் ஏன் உதவக்கூடாது? பார்ப்பனரும் ஸர்க்காரின் குடிகளல்லவோ? வரிசெலுத்தவில்லையோ? ஐரோப்பியர்க்கென்றும், ஆங்கிலோ இந்தியர்க்கென்றும்; மஹம்மதியர்க்கென்றும் மட்டில் தனித்தனியாக ஏற்பட்டிருக்கும் வித்யாலயங்களுக்கு வரிசெலுத்துவோர் பணம் வழங்கப்படவில்லையோ? அவ்வித பாத்தியம் ப்ராம்மணருக்கும் உண்டன்றோ? ஸ்வதேசஜனங்களாகிய நமக்கு ஸ்வயம் அரசாக்ஷிமுறையை அரசாங்கத்தார் சிறிது கொடுத்த

உடனேயே அதை வஹிக்கும் ப்ரமுகர்கள் ‘தாய்க்கொலை சால்புடைத்தென் பாருமுண்டு’ என்கிற கணக்கில் இத்தகைய வழிகளைக் கைக்கொள்வார்களாயின், ஜாதிமத பேதமின்றி ராஜ்யபரிபாலநம் பண்ணுவதென்று நடந்துவரும் ஆங்கில அதிகாரிகளின் முறையே மேலானதென்று ஏன் சொல்லக்கூடாது?

* * * * *

இச்சமயத்தில் மாக்ஸ்முல்லர் (Maxmuller) என்று ப்ரஸித்தரான வித்யாத்யக்ஷர் இத்தேவபாஷையைக் குறித்து வெகுகாலத்துக்குமுன் பேசியிருப்பதிலிருந்து இங்கு சிலவற்றை ஸங்க்ரஹிக்கின்றோம். அது வருமாறு:— “இந்தியாவில் வஸிக்கப்போகும் சிறுவர்களுக்கு ஸுகமாயும் தமக்கும் பிறர்க்கும் லாபகரமாயும் பொழுது போக்குவதற்கு ஸம்ஸ்க்ருதத்தை நன்றாய்க் கற்பதுமிக உபகாரமாயிருக்கும் என்பது என் துணிவு ஸம்ஸ்க்ருதத்தினால் இக்காலத்தில் என்ன ப்ரயோஜனம்? அது ம்ருதபாஷையல்லவா? இந்துக்களே தம் பூர்வீகப் புத்த ராசிகளைக் குறித்து லஜ்ஜைப்படுகிறார்களே? தன்னாட்டுப் பழைய கவிகளையும் தத்வ சாஸ்த்ரங்களையும் கற்பதைவிட ஆங்கிலத்தில் லாக், ஹ்யூம், மில், முதலிய ஆசிரியர்கள் வரைந்துள்ளவற்றைப் படிக்க அவர்கள் முன்வரவில்லையா? என்று பலர் கேட்பதை நான் அறிவேன். ஒருவிதத்தில் ஸம்ஸ்க்ருதம் இறந்த பாஷைதான்.......................................... ஆயினும் ஓரளவில் சென்றகாலத்திற்கும் இக்காலத்திற்கும் விச்சேதமில்லாமல் இருக்கும் ஆச்சர்யகரமான நிலைமையை இந்தியாவில் காணும்போது, பலநூற்றாண்டுகளாய் ஸமூஹ வாழ்வில் கலக்கங்களும் மதக்கோட்பாடுகளிற் திருத்தங்களும் அந்யதேச ஆக்ரமணங்களும் பலமுறைகளிலும் உண்டாயிருந்தும், அம்மஹா தேசத்தில் நாடெங்கும் ஸம்ஸ்க்ருத பாஷையே இன்றைக்கும் பொதுவாக வழங்குகின்றது என்று உறுதியாய்க் கூறலாம். பௌத்த அரசர்கள் தங்கள் மதஸம்பந்தமான சாஸனங்களை ப்ராக்ருத பாஷையில் வெளியிட்டிருப்பினும் பொது விஷயங்களைக் குறித்த சில சாஸனங்களிலும் ராஜ்ய ஸம்பந்தமான தஸ்தாவேஜுகளிலும் ஸம்ஸ்க்ருத பாஷையையே உபயோகப்படுத்தி வந்திருக்கிறார்கள். பௌத்தர்களும் ஜைனர்களும் தம் மதக்ரந்தங்களை ஸாமான்யஜன பாஷைகளில் எழுதி வந்தாலும், இந்தியாவில் உண்டான காவ்யம் சாஸ்த்ரம் முதலானவைகள் பாணிநீயமான ஸம்ஸ்க்ருதத்திலேயே எப்போதும் அமைக்கப்பட்டு வந்திருக்கின்றன.

‘இந்தியாவில் ஆங்கில அரசாட்சியும் ஆங்கிலக்கல்வியும் ஏற்பட்டு ஒரு நூற்றாண்டுக்கு மேல் ஆகியும் இன்றைக்கும் அந்நாட்டில் ஸம்ஸ்க்ருதத்தையே எல்லோரும் வெகுவாய் ஆதரிக்கின்றார்கள்.

‘இந்தியாவில் கற்றவர்களிடமிருந்து எனக்கு வரும் கடிதங்களெல்லாம் ஸம்ஸ்க்ருதத்திலேயே எழுதப்பட்டு வருகின்றன. தர்மசாஸ்த்ரம் (Law) மதம், முதலியவைகளைக் குறித்துக் கிளப்பும் சர்ச்சைகள் ஸம்ஸ்க்ருதத்திலேயே



வெளிப்படுகின்றன. முழுவதும் ஸம்ஸ்க்ருதத்திலேயே எழுதப்பட்ட பல பத்ரிகைகள் இருக்கின்றன. உதாரணமாய்:—காசியில் ப்ரசுரமாகும் ‘பண்டிட்’ என்னும் பத்ரிகையில் ப்ராசீன க்ரந்தங்களை ப்ரசுரிப்பதுடன் ஆதுநிக விஷயங்களைப்பற்றிய வ்யாஸங்களும் ஐரோப்பாவில் அச்சிடப்படும் புத்தகங்களைக் குறித்த விமர்சங்களும் இன்னும் மற்றவிஷயங்களைக் குறித்த சர்ச்சைகளும் எல்லாம் ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே எழுதப்பட்டிருக்கின்றன.

‘இதிலும் ஆச்சர்யமான ஸங்கதி என்னவென்றால் அங்கு அச்சிடப்படும் ஸம்ஸ்க்ருத புத்தகங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் இந்தியர்களுக்குள் சிலவாய் விடுகின்றன என்பது. ஓர் புத்தகம் வெளிவந்து ஒரு வருஷத்திற்குப் பிறகு இங்கிலாந்தில் இரண்டொரு ப்ரதிகள் வேண்டுமென்று எழுதினோமானால் புத்தகங்கள் இந்தியாவிலேயே சிலவாய் விட்டனவென்று பதில் கிடைக்கின்றது. இதேமாதிரி இங்கிலாந்தில் பழைய இங்கிலீஷ் (Anglo-Saxon) பாஷையிலுள்ள புத்தகத்தையாவது இட்டலிதேசத்தில் லாடின் புத்தகத்தையாவது அச்சிட்டால் புத்தகங்கள் சிலவாகுமா?

‘கோவில்களிலும் மற்றும் ஊர்களில் ஜனங்கள் திரளாகச்சேரும் இடங்களிலும் மஹாபாரதம், ராமாயணம், முதலியவைகள் ப்ரவசனம் செய்யப்பட்டு வருவதில், ப்ரவசனம் செய்யும் கதகர் பழைய ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களையே வாசித்து அர்த்தம் சொல்லவேண்டுமென்று இன்னும் ஜனங்கள் அபேக்ஷிப்பது இவற்றையெல்லாம்விட அதிசயமாயிருக்கிறது. வைதீக வித்யைக்கு அதிகச்செல்வாக்கு இல்லாமலிருந்தும் ருக்வேதம் முதலியவைகளை மனப்பாடமாகச் சொல்லக்கூடிய ப்ராஹ்மணர்கள் பலர் இன்றும் இருக்கிறார்கள்.

‘ஸம்ஸ்க்ருதம் ம்ருதபாஷை என்று கக்ஷிக்காக விபரீதமாக க்ரஹித்தாலும் இந்தியாவில் இப்போது ஜீவித்திருக்கும் ஆர்ய த்ராவிட பாஷைகள் அடங்கலும் ஸம்ஸ்க்ருதத்திலிருந்தே தங்கள் ஸ்வரூபத்தையும் ஸத்தையையும் (Life & soul) பெறுகின்றன என்பதற்குச் சந்தேகமில்லை. ஸம்ஸ்க்ருதத்தை இலக்கணத்துடன் சிறிது கற்றாலும், வங்காளி, இந்துஸ்தானி, முதலியவைகளையும் தமிழையும்கூட எளிதில் கற்றுவிடலாம். அதையும் சேர்த்து நடப்பிலுள்ள பாஷையை ஒரு ஸிவில் உத்யோகஸ்தர் கற்றால் அவர் இந்தியாவையும் அதின் ஜனங்களையும் உள்ளபடி அறிய எளிதாய் வகைபெறுவார் என்பது திண்ணம்..................

‘இன்றுவரையாக ஸம்ஸ்க்ருதத்திலேயே புஸ்தகங்களும் எழுதப்பட்டு வருகின்றன. இவ்வதிசயம் சீனதேசம் தவிர உலகில் வேறெங்கும் காணப்படவில்லை. அந்த பாஷையில் உள்ள புஸ்தகங்களின் ஸங்க்யையையும் விசேஷங்களையும் இவ்வளவென்று கணக்கிடமுடியாது. அதிலிருக்கும் அருமையான ரத்னங்கள் இன்னும் அச்சிடப்படாமலே இருக்கின்றன. இந்தியா கவர்ன்மெண்டார் ஆங்காங்கு இவைகளுக்கு ஜாப்தாக்களைத் தயாரிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

ட்டில் செழித்துவந்த ஸம்ஸ்காராநுஷ்டானங்களையும் ஸ்வாபாவிகமான நடையுடைபாவனைகளையும் அடியொத்தி நிர்மாணம் செய்யப்பட்டதுமான ஜநகநந்திநீயில் இக்குறைகளில்லை. உதாரணமாய் சில 'நாவல்' களில் புதுநாகரீகப்பிச்சேறியவர்களின் நினைவுகளுக்கிணங்க, யுவதிகள் ஸ்வைரிணிகளாகத் தமது அபிநிவேசமொன்றேதுணையாக உயிர்த்தோழன்மார்களைத் தேடுவதும், பெற்றோர்கள் அவிவேகமே குடிகொண்டு அர்த்தாதிகளில் ஆசையினால் தம்மக்களுடைய உத்தரோத்தரவாழ்வை அனாதரித்து அவர்மனதைப்புண்படுத்தி அவர்கள் இசையாத புருஷர்களுக்குத் தானம் செய்யப்பார்ப்பதும், சிலபெண்கள் இந்த தர்மஸங்கடமான நிலைமையில் ஈன்றோர் ஆணையைக்கடக்க மனம் வராமலும் தம்மெண்ணம் நிறைவேறாததாலும் வெறுத்து உயிர் துறப்பதும், மற்றும் சிலர் பித்ராதிகளை அதிலங்கனம் செய்து, காதலரின் உதவியால் ரஹஸ்யமாய் வெளியேறியோ, வேறு உபாயத்தினாலோ தமது அபீஷ்டத்தை முடித்துக் கொள்வதும், விசேஷமாகச் சித்திரிக்கப்படுகின்றன. ஜநகநந்திநிக்கோ வென்றால் தன் 'விவாக விஷயத்தில் அவர் (பிதா) ஸரியாய் நடப்பர் எனும் விச்வாஸம் த்ருடமாயிருந்தது'. 'ஸ்ரீநிவாஸன் தன்னைப் பார்யார்த்தம் அபேக்ஷிக்கிறான் என்னும் விஷயம் அன்றுதான் ஜநகநந்திநிக்குத் தெரியும். முதல்நாள் ஸாயங்காலம் அவன் தன்னுடன் ஸம்பாஷிக்கையில் முடிவாகச்சொன்ன சொற்களின் தாத்பர்யத்தை கிஞ்சித் யோசித்தாள். பலநாள் பழக்கத்தால் ஸ்ரீநிவாஸனிடம் அவளுக்கு அபிப்ராயமும் ஓர் உத்தேசத்தைக்குறிக்காமல் அநுகூலமாகவேயிருந்தது. ஆனால் அவனுக்கும் தனக்கும் விவாஹத்தை சாஸ்த்ரம் ஸம்மதிக்கமாட்டாது என்பதையும் யோசித்தாள். தன்னுடைய பிதா தனக்குப் பதியாகயாரை வரித்தபோதிலும் அந்தப்புருஷன்தான் தனக்கேற்ற புருஷனாகத்தக்கவன் என்றும் நிச்சயம் செய்தனள். எனவே அவள்பிதா வரித்த வரனைக்குறித்து அவர் 'ஜநகம் ...... உனக்கேதாவது சொல்லவேண்டுமோ ? ......' என்று கேட்க 'அப்பா ! தேவரீர் திருவுள்ளப்படி நடப்பதுதான் அடியேன் ஸ்வரூபம். ............................தேவரீர் அடியேனுக்காக வரித்தபுருஷனைப் பர்த்தாவாகப் பஹுமானித்து த்ருப்தியோடு சுச்ரூஷை செய்வேன்' என்றாள் ஜநகநந்திநீ ! இவளன்றோ ஸ்த்ரீரத்னம் ! இப்படி இன்னும்பல ஸந்தர்ப்பங்களை இப்புத்தகத்தில் உதாஹரிக்கலாம்.

நமது காவ்யங்கள் நாடகங்கள் முதலியவற்றில் உத்கடங்களான சோகரஸ ப்ரஸ்தாவங்கள் பரவியிருப்பினும் அவை பர்யவஸாநத்தில் சுபமாகவே முடியும் இயல்புள்ளன; படிப்பவர் மனது கடைசியில் நிர்ப்பரமான (பாரம் கழிந்த) நிலைமையை அபேக்ஷிப்பதுதான் ஸ்வாபாவிகம்; துக்கபர்யவஸானரூபமான ரசனைகள் (Tragedies) நம் நாட்டுப்பரம்பரையான பழக்கங்களுக்கநுரூபமல்லாதவை; என்று ஓர் சாரார் நினைப்பார்கள். மேல் நாட்டவரோ வென்றால் வாசிப்பவருக்கு வைராக்யம், யுக்தாயுக்த விவேகம், முதலிய நற்குணங்களைப் புத்தியிற் புகட்டவும், லோகவ்ருத்தாந்தங்களை நிதானமாய்



ஆராய்ந்து சாந்தராவதற்கும், இத்தகைய க்ரந்தங்கள் சுபபர்யவஸாயிகளானவை (Comedies) களைக் காட்டிலும், அதிக அநுகூலமானவையென்று கொள்வார்கள். ஜநகநந்திநியின்முடிவிலும் அவள்தேகத்தைச் சிதையிலிட்டபோதும் அவளைக்காதலித்த ஸ்ரீநிவாஸனுடைய சேஷ்டிதங்களையும், அவனுடைய சரமகதியையும் சித்தத்தையுருக்கும்படி வர்ணித்துக் கதையை முடித்திருப்பது ஆங்கிலத்தில் மிக உயர்ந்த பத்ததியெனக் கருதப்படும். நம்மவர்களும் இவ்விடங்களிலுள்ள கற்பனைகளை அத்யந்தம் உகப்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை. ஆனால் இங்கு கதைமுடிவதில் அவர்கள் பூர்ணமான த்ருப்தியையடைவது ப்ரயாஸம். இதைக்கணிசித்தே, பரதன் அத்யந்த சோகாவிஷ்டனாகப் பெருமாளைத் திருவயோத்யைக்குத் திரும்பும்படி ப்ராத்தித்தபோது, அவ்வுத்கடதசையைத் தாங்குவதற்காக ஜாபாலியை வால்மீகிபகவான் கொண்டுவந்துவிட்டதுபோல், நம்மாசிரியரும் பாடசாலைப் பண்டிதர்களை இத்தருணத்தில் ப்ரவேசிப்பித்தார் போலும் ! இந்தக்கதையின் நிர்மாணத்தில் அபிப்ராய பேதங்களிருக்கக் கூடுமென்று இவர்தாமே முகவுரையிலிசைந்திருப்பதையும் இங்கு கவனிக்கவேண்டும்.

இது நிற்க 'ஸாரஜ்ஞோ யதி கஶ்சிதஸ்தி புவநே நாதஸ்ஸ யூதஸ்ய ந:' (இப்படி அநுபவபர்யந்தமாக சாஸ்த்ர ஸாரத்தை யறிந்த மஹான் உலகிலிருப்பின் அவர் நம் கூட்டத்துக்கு நாதனாகக் குறையில்லை) என்று ஸ்ரீதேசிகன் நிஷ்கர்ஷித்த ஸாத்விக சிரோமணியின் ப்ரகாரங்களைக் கேசவாசார்யர் முகமாக இக்கதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்கியிருக்கின்றது. மற்றும் இதில் ஸ்ரீவைஷ்ணவ தர்ம நிஷ்டர்களுடைய ஸ்வபாவாதிகளை நிர்த்தாரணம் பண்ணிக்காட்டியிருக்கும் படிகளை எடுத்துரைக்க இவ்விமர்சம் வளருமானதால், இதை இங்கு நிறுத்துகின்றோம்.

'ஜநகநந்திநீ' யில் வைதிக தர்மநிஷ்டைகளை ப்ரதிபாதிக்கும் அம்சங்களை நாம் முக்கியமாக எடுத்துரைத்திருப்பினும், அதில் ச்ருங்காரம், ஹாஸ்யம், சோகம், முதலிய ரஸங்கள் அழகாய் அமைந்திருப்பதையும், பின்னருசிகளையுடைய ஜனங்களுடைய விவிதங்களான மனோபாவங்கள், நடவடிக்கைகள், முதலியவை ஸ்வாபாவிகமானபடிகளில் விளக்கப்பட்டிருப்பதையும், பகவதுத்ஸவ வைபவங்கள், முதலியவைகளின் வர்ணனைகளையும், செய்யுளமைப்புக்களையும், மற்றுமிப்புடைகளில் நம்மாசிரியர் விசேஷித்துக்காட்டியிருக்கும் நாற்றிறமைகளையும் ஒருபடியாலும் அப்ரதாநமாக நினைத்தோமல்லோம். 'ஸதாமிஹ ரஸம் நவமம் ஸூதே' (ஸத்துக்களுக்கு இது ஒன்பதாவதான சாந்திரஸத்தைச் சுரக்கும்) என்னும் கணக்கில் சாந்திரஸப்ரதாநமாக இக்கதை இணைத்திருப்பினும், இது வேதாந்த ப்ரதானரல்லாத ரஸிகர்களுக்கும் அவர்கள் உகக்கும்படிகளில் ஹ்ருதயங்கமமாகவிருக்குமென்று நாம் உறுதியாகக் கூறுவோம்.

பத்ராதிபர்.

18674

ஸ்ரீ:

ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# கீதார்த்தங்களில் சில அதிவாதங்கள்.

---

இவை பலவாறு இருப்பினும் இங்கு இரண்டொன்றை மட்டும், இக்காலத்தவரின் மனப்பான்மையைக்காட்ட, எடுத்துரைப்போம்.

வேதம் வல்லார்களான பெரியோர்கள் அங்கீகரித்திருப்பதே ஓர் க்ரந்தத்தின் ப்ராமாணிகதைக்கு அத்தாக்ஷி என்பது நமக்கு அனுதியான உபதேசம். இவ்வர்த்தம் வேதாந்த தீபத்தில் ஶிஷ்டாபரிக்ரஹாதி கரணத்தில் ‘ந பரிக்ருஹ்யந்தே ஶிஷ்டை: இத்யபரிக்ரஹா:’ (சிஷ்டர்களினுல் பரிக்ரஹிக்கப் படுகிறதில்லை என்பதினுல் அபரிக்ரஹங்கள் என்னப்படும்) என்று உடையவர் அருளிச்செய்திருப்பதினுல் ஸித்தம். அப்படி அங்கீகரிக்கப்படாதவை ப்ர மாணங்களாகமாட்டா. ‘[illegible]’ முதலிய க்ரந்தங்களிலும் இதே அர்த்தம் பூர்வாசார்யர்களால் விஸ்தாரமாக நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. அப்படியிருக்க, ஆஶ்ரிதர்க்காகத் தூதுபோவது, தேரோட்டுவது, முதலியவைகளையும் செய்யும்படி பக்ஷபாதமுள்ள கருணைநிதியான ஸ்ரீ க்ருஷ்ண பகவானுல் ‘ஶிஷ்யஸ்தே(அ)ஹம்’ என்று விழுந்தடிசேர்ந்த விஜயனைக் குறித்துபதேசிக்கப் பட்டு, வைதிகரால் ஆதரத்துடன் வ்யாக்யானங்கள் செய்யப்பட்டதென்பதைவிட வேதத்தை ஒப்பாதவரும் இகழ்ந்தவருமான விதேசீயர்களால் ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பதனுல் ஸ்ரீகீதை உபாதேயமாயிற்று என்று நம்மவரில் சிலர் பேசுவது ‘அஹோ பத மஹத்கஷ்டம் விபரீதமிதம் ஜகத் । யேநாபத்ரபதே ஸாது: அஸாதுஸ்தேந துஷ்யதி ॥’ (ஆ! கஷ்டம்! ஜகத்தின் விபரீதத்தை என்னென்பது! பெரியோர்களுக்கு லஜ்ஜாவஹங்களாயிருப்பவைகளே அஸாத்விகர்களுக்கு ப்ரீதியைக் கொடுக்கின்றனவே!) என்று வ்யாஸமஹர்ஷி நிர்வேதப் பட்டதற்கு நிதர்ஶனமாயிற்று.

கீதைபோன்ற மஹிமைதங்கிய க்ரந்தங்களின் அர்த்தங்களை ஸதாசார்யர்கள் முகமாகவே க்ரஹிக்கவேண்டும், அப்போது தான் அவற்றின் உண்மை



விளங்கும், அநுஷ்டான பர்யந்தமாக அந்த ஜ்ஞானம் ஸபலமாகும் என்று சாந்தோக்யம் முதலிய உபநிஷத்துக்களிற் சொன்னபடி, ஸ்ரீகீதையில் ‘தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா । உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்த்வதர்ஶிந: ॥’ (தத்வதர்சிகளான ஞானிகள் பக்கலில் வணங்கி வழிபட்டுக் கேட்டு அதைத் தெரிந்துகொள்; அவர்கள் உபதேசிப்பார்கள்) என்றது கீதையிலுபதேசிக்கப்பட்ட விஷயங்களைச் சொல்லுகிறதா அல்லது அவச்யம் தெரிந்துகொள்ள வேண்டியதும், இங்கில்லாததுமான மற்றவிஷயங்களைக் குறிக்கின்றதா? கீதையில் அறிய வேண்டியவை யெல்லாம் சொல்லப்பட்டிருந்தால் பிற் கூறியவைகளைப் பற்றியவிதி வீணுகுமே என்று சிலர் நினைப்பார்கள். இதற்குச் சமாதானம், கீதாபாஷ்யத்தில் ‘தச்ச ஆத்மவிஷயம் ஜ்ஞாநம், ‘அவிநாஶி து தத்வித்தி’ இத்யாரப்ய ‘ஏஷா தே(அ)பிஹிதா’ இத்யந்தேந உபதிஷ்டம்’ (அது என்பது ஆத்மவிஷயம்; அது நசிக்கத்தகாதது என்றாரம்பித்து, இதை உரைத்தேன் என்னும் வரையில் என்னுல் உபதேசிக்கப்பட்டது) என்பதிலும், ஸ்ரீமத் தாத்பர்ய சந்த்ரிகையில் ‘உபதிஷ்டமேவ ஜ்ஞாநம் தத்தத்விபாகதஶாயாம் ப்ரதிக்ஷண வைஶத்யாய பூய: பூய: ஜ்ஞாநிப்ய: ஶ்ரோதவ்யம் இத்யுபதிஶ்யதே’ (உபதேசிக்கப்பட்ட ஞானத்தையே அந்தந்தப் பக்குவ காலங்களில் ஒவ்வொரு க்ஷணத்திலும் தெளிவாயறிய அடிக்கடி ஞானிகளிடத்தில் கேட்கவேண்டும் என்றுபதேசிக்கப்படுகின்றது), ‘என்றும் உக்தம் ... ந த்வநுபதிஷ்டஸ்ய ஜ்ஞாநஸ்ய கஸ்யசித் ஶ்ரோதவ்யத்வம் நாத்ரோபதிஶ்யத இதி பாவ:’ (இதற்குமுன் உபதேசிக்கப்படாத ஒரு ஞானத்தை எவரிடமாவது கேட்கவேண்டுமென்று இங்கு சொல்லப்படவில்லை என்று கருத்து) என்னும் வ்யாக்யானம் செய்திருப்பதிலும் கண்டுகொள்வது.

அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட வர்ணுச்ரம தர்மங்களை எவரும் எவ்விதத்திலும் விடக்கூடாதென்பது ஸ்ரீகீதையில் ‘யஜ்ஞதாநதப:கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத்’ ‘ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர:’ ‘ஸஹயஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா ........... ஏவம் ப்ரவர்த்திதம் சக்ரம் நாநுவர்த்தயதீஹ ய: ........... மோகம் பார்த்த ஸ ஜீவதி’ ‘குர்யாத் வித்வாம்ஸ்ததாஸக்தஶ் சிகீர்ஷுர் லோகஸங்க்ரஹம்’ ‘ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத்’ இத்யாதியாய் அநேக விடங்களில் உபதேசிக்கப்பட்டது. இதைகவனித்தால், ‘வித்யாவிநய ஸம்பந்நே’ என்னும் ச்லோகத்தில்

மணன் முதல் சண்டாளன் வரையிலுள்ள எல்லா வர்ணத்தாரையும் ஏகஜாதீய ராகக் கருதவேண்டு மென்று சொல்லப்படவில்லை என்பது விஶதமாகும். சண்டாளர்களையும் ப்ராம்மணர்களையும் ஒன்ருக்கி அவர்களுக்கு வேதாந்தங்களைச் சொல்லிக்கொடுக்க வேண்டும், அவர்களை தேவாலயங்களில் விடவேண்டும், தீண்டாமையை ஒழிக்கவேண்டும், என்பது முதலியவை கீதையிற்சொன்ன ஸமதர்சநத்துக்குப் பொருள் என்று பிதற்றுவது தகாதென்பதும் ஸ்பஷ்டமாகும். இவ்விபரீதத்தை யநுஸரித்து வித்யாவிநய ஸம்பந்நனை ப்ராம்மணனுக்கும் நாய்க்கும் வித்யாஸமில்லை யென்ருல் இதனடியாகத் தோன்றக்கூடிய அதிப்ரஸங்காதிகளைச் சொல்லவும் வேண்டுமோ? ஶ்ரோத்ரியன் அந்வயிக்க வேண்டிய இடங்களில் ஶ்வா அந்வயிக்க நேரிடுமே! 'மாம் ஹி பார்த்த வ்யபாஶ்ரித்ய யேபி ஸ்யு: பாபயோநய: । ஸ்த்ரியோ வைஶ்யாஸ்ததா ஶூத்ராஸ் தேபி யாந்தி பராம் கதிம் ॥ கிம் புநர் ப்ராஹ்மணா: புண்யா பக்தா ராஜர்ஷயஸ் ததா ॥' என்னும் ச்லோகங்களில் 'பாபயோநய:' (பாபயோநிகளா யிருந்தாலும்) 'புண்யா: கிம் புந:' (புண்யவான்களைப் பற்றிச் சொல்வானேன்) என்பதினுல் ஸ்த்ரீபுமான்களுக்கும் ப்ராம்மண சூத்ராதிகளுக்கும் பரஸ்பர வித்யாஸம் தெளிவாய் நிரூபிக்கப்பட்டது. அப்படியே 18-வது அத்யாயத்தில் 'ப்ராஹ்மண க்ஷத்ரிய விஶாம்' என்ருரம்பித்து விஸ்தாரமாக ஜாதிபேதங்களும் அவற்றிற்குரிய கர்மபேதங்களும், குணபேதங்களும் சொல்லப்பட்டன.

இதுபோல், 10-வது அத்யாயத்தில் 'ஆதித்யாநாமஹம் விஷ்ணு:' என்ருரம்பித்துச் சிலவற்றை பகவத் விபூதிகளாகச் சொல்லியிருப்பதும், அவைகளும் பகவானும் ஒன்றென்னு மபிப்ராயத்தா லல்ல வென்றறிய வேண்டும். அவைகளுக்கு பகவான் அந்தர்யாமி என்று மாத்திரம் சொல்லப்பட்டது. 'உம்முடைய விபூதிகளைச் சொல்லவேண்டு' மென்று அர்ஜுநன் கேட்க, ஸ்ரீக்ருஷ்ணன் 'அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶய ஸ்தித:' (நான் எல்லா வஸ்துக்களுக்கும் அந்தராத்மாவாக இருப்பவன்) என்ருரம்பித்து 'என் விபூதிகளுக்கு 'முடிவில்லை' என்று உத்தரம் அருளிச்செய் திருப்பதையும் கவனிக்க வேண்டும். இதனுல் பகவான் வேறு, அவன் விபூதிகளான வஸ்துக்கள் வேறு என்பது ஸித்தம். ஆகையால் 'அஶ்வத்த: ஸர்வவ்ருக்ஷாணாம்' என்பதற்கு 'என்விபூதிகளாகிய அஶ்வத்தம் முதலியவைகளை ஸேவி' என்றர்த்தம் பண்ணுவது, கீதார்த்தங்கள் விளங்கவில்லை என்பதைத்தான் காட்டும்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# கடிதங்கள்.

## (1)

## ஸ்ரீ ரஸ்து.

மார்கழி நீராட்டம் என்னும் விரதத்தைப் பன்னிருவாழ்வார்களில் ஒருவரான ஸ்ரீசூடிக் கொடுத்த நாச்சியார் திருவாய்மலர்ந்தருளிய திருப்பாவை யென்னுந் திவ்யஸூக்தியின் அநுஸந்தானத்துடன் மார்கழி மாஸத்தில் தினந்தோறும் அநுஷ்டிப்பது நமது நாட்டில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமாகவிருக்கிறது. ஆனுல் ஆண்டாள் இவ்விரதத்தை அநுஷ்டிக்கப் பெற்றது என்னுள் என்பது எம்போன்றவர்க்குச் ஸம்ஶயத்துக் கிடமாகலாம். திருப்பாவையில் முதல் பாசுரத்தில் "மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னுளால்" என்றிருப்பதனுல் அது மாஸங்களுக்குள் சிரேஷ்டமாகிய மார்கழி மாஸத்தில் பௌர்ணமி யாகிய மங்களதினம் என்று விளங்குகிறது. மாஸமும் திதியும் சொல்லியதுடன் தினத்தையும் "நன்னுள்" என்று சொல்லியிருப்பதனுல் மங்களகரமான நாளும் கூடியதென்றேற்படுகிறது. சனி, செவ்வாய்க்கிழமைகள் மங்கள தினங்களாகா. மற்றைய தினங்களிலும் எல்லாவற்றிற்குமே அவ்வளவாக விசேஷமும் கிடையாது. ஆனதுபற்றியும், நமது நாட்டில் ஸாதாரணமாக வெள்ளிக்கிழமை சுபங்களுக்கேற்ற தினமாகக் கருதப்படுவதாலும், அதிலும் ஸ்திரீகளுக்கு மங்கள நீராடுவதற்கு இந்த தினமே விசேஷமாயிருக்கும் உலகவாழ்க்கையை அநுஸரித்தும், ஆண்டாள் திருப்பாவையில் உகந்தருளிய தினம் வெள்ளிக்கிழமை கூடிய பௌர்ணமி என்று ஊகிப்பதற்கிடமாகிறது. இதுவுமன்றி, "வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று" என்று ஆண்டாள் தாமே பின்னே கூறி யிருப்பதாலும், இதுபௌர்ணமியும், வெள்ளியுங் கூடப்பெற்ற தினமென்பது திடப்படுகிறது. ஆனுல் "வெள்ளி யெழுந்து வியாழமுறங்கிற்று" என்பதற்கு இங்கே கூறியுள்ள விடியற்காலையின் லக்ஷணங்களனேகத்தில் இதுவு மொன்ருக "சுக்கிரோதயமாய் குரு அஸ்தமனமாயிற்று" என்று ஸாமான்யமாய்ப் பொருள்கூறி நிறுத்து வாருமுளர்.

"வெள்ளியெழுந்து" என்று அடியை ஆரம்பித்ததற்குக் கேவலம் ப்ராஸமாத்திரத்திற்கேயென்று நாம் நினைப்பது சிறப்பாகத் தோன்றவில்லை. வெள்ளிக்குப் ப்ராதான்னியமும் அங்கே மறைபொருளாக விளங்குகின்றது. ஏனெனின் அங்கே வேறென்றையும் சொல்லாமல் உடனே "வியாழமுறங்கிற்று" என்று ஆண்டாளருளியதின் விசேஷமென்ன? வியாழக்கிழமை முடிந்து வெள்ளிக்கிழமை உதயமாய்விட்டது என்று நினைவூட்டியது போலுங் காணப்படுகிறதல்லவா? இதுவுந்தவிர இதுவரைக்கும் காலையின் குறிகளையெல்லாம் முறையாய்க் கூறிவந்து முடிவில் தாங்கள் தலைக்கொண்ட நோன்புநாளும் உதித்துவிட்டது என்று நாளையும் உணர்த்தியதாகும். இன்னும் இதே பாசுரத்தில் "குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே பள்ளிக்கிடத்தியோ பாவாய்நீ நன்னுளால்" என்று அடுத்துக் கூறப்பட்டுளதும் யோசிக்கத்தக்கது. இதர பாசுரங்களில் பொது

வாக "மார்கழி நீராடி மகிழ்ந்து" என்றும், "தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்" என்றும், "மனத்துக்கினியானைப் பாடவுநீ வாய்திறவாய்" என்றும், "எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும்"... "எற்றைக்கு றங்கும் பொருள்" என்றும் இத்யாதி வாக்யங்களில் கருத்தையே பலவாறாகக் கூறியிருக்க இதில் மாத்திரம் "குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே" என்று கூறியிருப்பது அன்றையதினம் வெள்ளிக்கிழமையுமாகி ஸ்வபாவமாகவே தாங்கள் நீராடும் நன்னாளாயிருத்தல் பற்றியல்லவா? மேலும், "பள்ளிக்கிடத்தியோ பாவாய் நீநன்னாளால்" என்று இதைக் "குள்ளக் குளிர..." என்கிற வாக்கியத்தின் பின் வைத்துக் கூறியதினால் இயற்கையாய் நீராடுந்தினமான வெள்ளிக்கிழமை பொழுது விடிந்துங்கூட பள்ளிக்கிடத்தல் தகுதியோவென்று அன்றையதினத்தின் பெண்கள் கடமையையுமுணர்த்திப் பள்ளியெழுப்பிய வாறல்லவோ புலப்படுகிறது.

ஆனால் வெள்ளிக்கிழமை கூடிய பௌர்ணமி பிரதிவருஷமும் மார்கழிமாஸத்தில் வருமென்றாவது, அப்படிக் கூடிவருந்தினந்தான் இவ்விரத தினமென்றும், அல்லாதநாளில் இவ்விரதமில்லை யென்றாவது சொல்லத்துணிந்தேனல்லேன். அங்ஙனம் மார்கழித்திங்களில் நிறைமதியும் வெள்ளிக்கிழமையுங்கூடிப் பொருந்தியதினமே திருப்பாவையில் தோன்றும் "நன்னாள்" என்று இங்கு சொல்லப்புகுந்தது.

இந்தத் திதிவாரப் பொருத்தமுடைய தனிய நாள் நடந்த மார்கழியில் போகி யன்றையதினம் வாய்க்கப்பெற்றதை நாம் அறிவோம். அன்றையதினம் மார்கழி நீராடி மகிழ்ந்தவர்கள் பட்டர்பிரான் கோதையின் கிருபாகடாக்ஷத்தினால் "செங்கட்டிருமுகத்துச் செல்வத்திருமாலால் எங்குந்திருவருள் பெற்றின்புறுவர்" என்பதற்கையமேயில்லை.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

சித்தூர்.

சேட்லூர் துரைஸாமி அய்யங்கார்.

## (2)

## ராஜமன்னார்கோவில் வித்வத் ஸபை.

[இந்தப் பங்குனிமாஸத்தில் ராஜமன்னார்கோவிலில் ப்ரும்ம உத்ஸவத்தின்போது ஸம்ஸ்க்ருத பாடசாலையில் நடந்த வித்வத் ஸபையில், ஸ்ரீமான் திவான்பஹதூர் வி. கே. ராமானுஜாசார்யர் பண்டிதர்களைச் சில கேள்விகள்கேட்டு அதற்கவர்கள் கூறிய உத்தரங்களை இங்ஙனே சுருக்கி எழுதுகின்றேன்.]

'இந்துமதத்தில் ஆத்மக்ஷேமத்தை அளிக்கக்கூடிய அனேக க்ரந்தங்கள் இருந்தாலும் அவற்றுள் ஸ்ரீ பகவத்கீதையானது ரொம்பவும் சிறந்ததென்கிற விஷயத்தை, மேல் நாட்டார்களும் இதைக் கொண்டாடுவதாலும், மற்ற தேசங்களிலும் இது அன்னிய மதஸ்தர்களாலும் ஆதரிக்கப்பட்டுவருவதாலும், யாவரும் அறிந்திருக்கலாம். இந்த கீதையை வேதத்தை ஆதிகாலத்தில் ப்ரும்மாவுக்கு உபதேசித்த ஸர்வேசுவரன் தானே ஸ்ரீ கிருஷ்ணபகவானாக அவதரித்து அர்ஜுனனை வியாஜமாகக்கொண்டு நாட்டார்யாவரும் நற்கதியடையக்கருதி உபதேசித்தான். அதில் 'वेदान्तकृद्वेदविदेव चाहम्' என்று தானே வேதத்தின்பொருளை முற்றிலும் அறிவேன் யென்று சொல்வதாலும், ஸ்ரீ பாஷ்யகாரர் முதலானவர்கள் இந்த கீதையை ஸர்வவேதார்த்தங்களும் அடங்கியதாக அங்கீகரிப்பதாலும், கீதையிற் சொல்லப்படும் விஷயங்களே நமக்கு முக்கியமானவை. அதற்கு விருத்தமான விஷயங்கள் ஆதரிக்கத்தகுந்தவையல்ல. ஆகையினால் யெனக்கு இந்த கீதையை விசேஷமாக வாசித்ததி லிருந்து சில ஸம்சயங்கள் உண்டாகி இருக்கின்றன. அவைகளை இப்போது இந்த மகாஸபையில் சொல்லுகிறேன். இதைப் பெரியோர்கள் ஆராய்ந்துபார்த்து நல்லதாக இருந்தால் அங்கீகரிக்கலாம். அல்லது இதற்கு ஸமாதானத்தையாவது ஸ்ரீ கீதையில் இருந்தே சொல்லவேணுமாக கேட்டுக்கொள்ளுகிறேன்' யென்னும் முகவுரையுடன் அவர் கேட்டதாவது :—



1. கீதையைத்தவிர வேறு ப்ரமாணங்களை ஆதரிக்கக்கூடாது. கீதை ஒன்றுதான் முக்கிய ப்ரமாணம். அதில் யாவரையும் ஸமமாகப் பார்க்கச்சொல்லி இருக்கிறது.

2. ஸ்ரீ கீதையானது ஈச்வரனால் உண்டுபண்ணப்பட்ட யெல்லா ஜனங்களுடைய க்ஷேமத்தையும் உத்தேசித்து உபதேசிக்கப்பட்டபடியினால், சூத்திரர்களும் அதை வாசித்தும் அதின்படி அனுஷ்டித்தும் க்ஷேமத்தை அடையலாம்.

3. 'किं पुनः...... स्त्रियो वैश्यास्तथा शूद्रास्तेऽपि यान्ति परां गतिम् ॥' என்று ஸ்த்ரீகளும் சூத்திரர்களும் பக்தியோகத்தை செய்யலாமென்றும், 'स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः' என்பதினால் கீழ் 'परिचर्यात्मकं कर्म शूद्रस्यापि स्वभावजम्' என்று சூத்திரர்களையும் பிரஸ்தாபித்து இருப்பதினால் சூத்திரர்களும் கர்மயோகபக்தியை செய்யலாம்.

4. ஜீவனுடைய ஸ்வரூபமானது சேஷத்வமாகையினால் அதற்கு அனுகுணமான மோக்ஷம் கைங்கர்யமே அல்லது ஆனந்தானுபவமல்ல. ஸ்ரீ கீதையில் மோக்ஷம் அனந்தானுபவமென்று சொன்னதாக தெரியவில்லை.

5. ஸ்ரீ கீதை 8-வது அத்யாயத்தில் அக்ஷரத்தை உபாஸிப்பதற்கும் பகவதுபாஸனத்திற்கும் ஒரே ப்ரயோஜனம் சொல்லப்படுவதால் தனித்தனி ப்ரயோஜனம் சொல்வது உசிதமன்று.

6. 'किं तद्ब्रह्म किमध्यात्मं किं कर्म पुरुषोत्तम' என்கிற ஶ்லோகத்தில் 'किं पुरुषोत्तम' யென்கிற இடத்தில் 'किं' (என்னை) யென்கிற பதத்திற்கு 10-வது அத்தியாயத்தில் ஸ்ரீ கண்ணபிரான் 'யானைகளுக்குள் நான் ஐராவதமென்கிற யானையாக இருக்கிறேன்; குதிரைகளுக்குள் உச்சைசிரவஸ்ஸென்கிற குதிரையாக இருக்கிறேன்; மரங்களுள் அரசுயென்கிற மரமாக இருக்கிறேன்; தேவருஷிகளுக்குள் நாரதனாக இருக்கிறேன்; ஸித்தர்களுக்குள் கபிலனாகவிருக்கிறேன்' யென்று தன்னை யெல்லா உலகத்தின் உருவமாகச்சொல்லுகிறபடியினாலேயும், ஸ்ரீ பாகவதம் 11-ஸ்கந்தத்தில் உத்தவ கீதையில், 'विसृज्य स्मयमानान् स्वान् दृशं व्रीडां च दैहिकीम् । प्रणमेद्दण्डवद्भूमावाश्वचाण्डालगोखरम् ॥' யென்கிற ச்லோகத்தினால் ஸர்வப்பிராணிகளிடமும், தேஹஸம்பந்தத்தினால் உண்டான வெட்கத்தையும்

விட்டு சண்டாளன், நாய், கானை, கழுதை, இவைகளை நமஸ்கரிக்கவேண்டுமென்று விதிக்கையினுல் பக்தியுள்ள மகான்கள் இவைகளை ஈச்வரபுத்தியினுல் நமஸ்கரிக்கவேண்டியது.

இவ்வாறு சில ஸம்சயங்களையும் இன்னம் சில ஸூக்ஷ்மமான அர்த்தங்களையும் ரொம்பவும் மெதுவான சப்தத்தினுல் யாவரும் அறியும்படி தெளிவாக உபந்யஸித்தார். அங்கு வந்திருந்த அனேகம் பண்டிதர்களும் பிரபுக்களும் மற்றும் ஆஸ்திகர்களும் கேட்டு ஆனந்தித்தார்கள்.

அக்காலத்தில் ஸ்ரீ இராமாநுஜாசார்யர்ஸ்வாமி உபந்யஸித்த விஷயத்தில் பண்டிதர்களுக்குள் அனேகர்கள் சில விஷயங்கள் சாஸ்திர விருத்தம்போல் இருப்பதை யோசித்து ஆலோசனை செய்துகொண்டிருக்கையில் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர்ஸ்வாமி ஸபாபிரவர்த்தகர்களைப்பார்த்து 'இந்த உபந்யாஸ விஷயத்தில் யெங்களுக்கு சில ஆக்ஷேபங்களிருப்பதால் அதை நாங்கள் சொல்வதற்காக 1-மணி காலம் அவஶ்யம் கொடுக்கவேணு' மென்றுகேட்க, அதற்கு ஸபாப்ரவர்த்தகர்களான ஸ்ரீமான் எஸ். சடகோப முதலியார் முதலிய ப்ரபுக்களும் ஷை ஸ்ரீமான் இராமாநுஜாசார்யர் ஸ்வாமியும் இணங்கி அப்போது ஸந்தியாகாலம் வந்துவிட்டபடியினுல் மறுதினம் காலை 8-மணிக்கு ஆக்ஷேபஸமாதானங்களை சொல்லிக்கொள்வதாக ஏற்பாடு செய்துகொண்டு ஸபை கலைந்தது. மறுதினம் காலை 8-மணிக்கு ஸ்ரீமான் வீ. கே. இராமாநுஜாசாரியர் ஸ்வாமியும் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியும், மற்றும் ஸபாபரீக்ஷகர்களான பண்டிதர்களும், அநேக வித்வான்களும், ஸ்ரீமான் எஸ். சடகோபமுதலியார் அவர்கள் முதலான அநேகம் பிரபுக்களும் ஸபைக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது ஸபாத்யக்ஷரான எஸ். சடகோபமுதலியார் வித்வான்களைபார்த்து, 'உங்களுக்குள் யாராவது ஒருவர்தான் ஸ்ரீமான் வீ. கே. இராமாநுஜாசாரியார் ஸ்வாமியுடன் எதிர்வாதம் செய்யலாம், எல்லாரும் பேசுவது உசிதமாகாது, ஆகையினுல் யாரை ப்ரதிவாதம் செய்யும்படி ஏற்படுத்துகிறீர்கள்' என்று கேட்டார்.

அதற்கு வயதினுலும் ஜ்ஞாநத்தினுலும் அதிகர்களான ஸ்ரீ. உப. வே. காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமியும், புது அக்கிரகாரம் ஈயுண்ணி ஸ்ரீ. உப. வே. வித்வான் மாதவாசாரியர்ஸ்வாமியும் 'புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியே பதில் சொல்லும்படி அபிப்பிராயப் படுகிறோம்' என்று சொல்ல, அதையே தில்லையம்பூர் ஸ்ரீ. உப. வே. வித்வான் சக்ரவர்த்தியாசாரியர், புது அக்ரகாரம் ஸ்ரீ. உப. வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசாரியர் முதலானயெல்லாவித்வான்களும் அநுமோதித்தவுடன் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி முதல் நாள் நடந்த விஷயங்களை அநுவதித்து இவ்விதமாகப் பதில் உரைத்தார்.

ஸ்ரீமான் வீ. கே. இராமாநுஜாசாரியர் ஸ்வாமி உபந்யஸித்த விஷயங்களுக்குள் ஸ்ரீகீதை ப்ரமாணங்களுக்குள் முக்கியமானதென்பதையும், அதற்கு விருத்தமான பிரமாணங்கள் ஆதரிக்கப் படாதென்பதையும், அது ஸர்வ ஜனங்களையும் ஸமமாகவே பாவித்து க்ஷேமத்தை அளிக்கிறதென்பதையும் நாங்கள் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனாலும் அந்தக் கீதையிலேயே 'யஃ ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்ததே காமகாரத: । நஸஸித்



திமவாப்னோதி நஸுகம் நபராம் கதிம் ॥ தஸ்மாச் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ । ஜ்ஞாத்வா ஶாஸ்த்ர விதானோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி ॥' என்கிற ஶ்லோகங்களினுல் எவன் ஶாஸ்த்ரீயமான மார்க்கங்களை விட்டுத் தன்னிஷ்டப்படி காரியங்களைச் செய்கிருனே அவனுக்கு இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் க்ஷேமமில்லை. ஆகையினுல் இவை செய்யக்கூடியவைகள், இவை செய்யத்தகாதவைகள், என்கிற விஷயத்தில் சாஸ்திரம் ஒன்றே ப்ரமாணமாகும். ஆகையினுல் சாஸ்திரம் சொன்ன விஷயங்களை நீ தெரிந்து, செய்யவேண்டிய காரியத்தைச் செய்வாயாக' என்று ஸ்ரீ பகவான், அர்ஜுனனைக்குறித்து அருளிச்செய் திருக்கையால், வேதங்களையும் அதின் வ்யாக்யாநங்களான ஸ்ம்ருதி, இதிஹாஸம், புராணங்கள், முதலியவைகளையும் நாம் பிரமாணமாக அங்கீகரிக்க வேண்டியது அவசியம்.

கீழ்ச்சொன்ன ஶாஸ்த்ர ஶப்தமானது இந்த கீதாஶாஸ்த்ரத்தையே சொல்லுகிறது என்று சொல்வது அனுசிதம்; இந்த கீதாஶாஸ்த்ரத்தில் ஏதாவது ஒரு ஜாதியினுடைய தர்மங்களும் முற்றிலும் சொல்லப்படாததினுலும், யாவருக்கும் பொதுவான பொய்பேசுதல், பரதாரங்களைத் தீண்டுதல்,ஸ்வர்ணஸ்தேயம், முதலான மஹாபாதகங்கள்கூட நிஷேதிக்கப்படாமையாலும், ஸந்தியோபாஸனம் முதலான கர்மாநுஷ்டானங்கள் குறிப்பிட்டு விதிக்கப்படாமையாலும், ஒரு மனிதனும் இந்த கீதாஶாஸ்த்ர மாத்திரத்தைக் கொண்டு தன் வர்ணாச்ரமங்களுக்கு அநுகுணமாகச் செய்யக்கூடியவை செய்யக்கூடாதவை என்று ஒன்றையும் நிச்சயிக்கமுடியா தாகையினுல் முன்சொன்ன ஶ்லோகமானது அஸங்கதார்த்தமாய் முடியும். ஆகையினுல் கீழ்ச்சொன்ன ச்லோகங்களிலுள்ள சாஸ்த்ரசப்தம் கீதை தவிர மற்ற ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களையே சொல்லுகிறபடியால் இந்த ஸ்ரீகீதையினுல் ப்ரமாணங்களாக அங்கீகரிக்கப்பட்ட ப்ரமாணங்களும் கீதையை ப்ரமாணமாக ஒப்புக்கொண்டவர்களுக்கு ப்ரமாணங்களேயாகும். ஆகையினுலன்றோ ஸ்ரீகீதாசாரியன் 'தத்வித்தி ப்ரணிபாதேந' என்கிற ச்லோகத்தினுல் கீதோபதேசம் பெற்ற அர்ஜுனனைக்குறித்து பெரியோர்களை ஆஶ்ரயித்து தெளியவேண்டும் அர்த்தங்களைத் தெளிந்து கொள்ளும்படி கட்டளையிட்டான். ஸ்ரீ கீதையே வேண்டிய யெல்லா விஷயங்களையும் தெளிய உபதேசிக்குமானுல் பெரியோர்களை ஆஶ்ரயித்து விஶதமாகத் தெளிந்துகொள்ள விதித்தது வீணுகமுடியும். '[illegible] ஶ்ரோதவ்யம்', '[illegible] ஶ்ரோதவ்யம்' என்றல்லவோ சாஸ்த்ரங்கள் விதித்திருப்பது.

2. ஸ்ரீகீதையில் 'ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர:' என்பது முதலான ஶ்லோகங்களினுல் நான்கு வர்ணத்தார்களும் தங்கள் தங்களுக்கு செய்யவேண்டியதாக நியமிக்கப்பட்ட கர்மங்களினுல் ஈச்வரனை ஆராதித்து க்ஷேமத்தை அடைவது விஹிதமானுலும், சூத்திரர்கள் கீதையை வாசிப்பது தவரானதென்பது சாஸ்திரஸித்தம் என்பதை '[illegible] । [illegible] ॥' என்று [illegible] என்னப்பட்ட வேதத்தின் அங்கம்-6, வேதம்-4, மீமாம்ஸை-1, ந்யாயவிஸ்தாரம்

1, புராணம்-1, தர்மசாஸ்திரம்-1, ஆக 14-ஐயும் சூத்திரர் முதலானவர்கள் தொடக்கூடா தென்று பாரதத்தில் சொல்லியிருப்பதாலும், இந்த அர்த்தத்தை 'விஷ்வாஸோ நாதி ஶூத்ரேஷு ஶ்ராவயேச்சதுரோ வர்ணாய விஸ்வாஸ்யஸ்யத்வஸ்யாதி' என்று அதிகரணஸாராவளி யென்கிற கிரந்தத்தில் ஸ்ரீதேசிகன் சொல்லி இருப்பதுடன் அதன் வியாக்கியமான சிந்தாமணியில் கீழ்குறிப்பிட்ட பாரதச்லோகத்தை ஸ்ரீநைநாசாசாரியர் யெழுதி இருப்பதாலும், நாம் நிச்சயிக்க வேணும். இதன் விஷயமான விஸ்தாரத்தை சூத்ர கமலாகரம் யென்னும் தர்ம சாஸ்திரத்திலும் காணலாம். ஆகவே கீதை பாரதத்தின் ஒருபாகமானதால் இதிஹாஸத்தில் சேர்ந்தது. அதை அவர்கள் பார்ப்பது ப்ரமாணஸித்தமாகாது.

3. 'மாம் ஹி பார்த்த வ்யபாஶ்ரித்ய' யென்கிறச்லோகத்தில் ஸ்த்ரீகளும் சூத்ரர்களும் யென்னை அடைந்து மோக்ஷமடைகிறார்கள் யென்று பகவான் சொல்லி இருப்பதால் சூத்திரர்கள் பிராமணர்களைப்போல வைதிகபக்தி யோகத்தைச் செய்யலாம் யென்பது அநுசிதம். ஏனென்றால் கீதையினால் ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளப்பட்ட வேதம் மனு, ஸ்ம்ருதி முதலானவைகளால் சூத்திரர்கள் வேதத்தைச் சொல்லக் கூடாதென்றும், மந்திரஸம்பந்தமுள்ள கர்மங்களை செய்யக் கூடாதென்றும் சொல்லி இருப்பதால் அது தகாதவைதான். ஆனாலும் பாஞ்சராத்திரத்தில் சொல்லி இருக்கும் வழியினால் தாந்திரிக பக்தியையாவது அல்லது ப்ரபத்தியையாவது செய்து அவர்களும் மோக்ஷமடையலாம் யென்றே கீழ்சொன்ன கீதையின் அபிப்பிராயம். இந்தவிஷயத்தை ஸ்ரீதேசிகன் தத்வமுக்தாகலாபம் என்கிற க்ரந்தத்தில் 'ஶுஶ்ரூஷாதேஶ் ஶ்ரவணநியமாத் ஶூத்ரதோ வைதிகேஷு ஸாக்ஷாத் பாஞ்சராத்ரே ஸதந்த்ரேவ்யவஸ்தாந ஸம்ஸ்தார வர்ணம் ஸித்தீ தந்த்ரோக்த ஸ்த்ரீ தாத்விகம்' என்று சொல்வதாலும், ஶ்ருதப்ரகாஶிகாவ்யாக்யானமான பாவப்ரகாஶிகையில் அபஶூத்ராதிகரணத்தில் சூத்திரர்களுக்கு சொல்லுகிற ப்ரஹ்மவித்யா நிஷேதம் பாஞ்சராத்ரத்தில் சொன்ன தாந்திரிகபக்திவிஷயமன்று என்று சொல்வதினாலும், 'அதஶ்ஶூத்ராதிகாராவி பாஞ்சராத்ரம் கேவலம் ஸாதனத்வேந:' யென்கிற அதிகரண ஸாராவளி க்ரந்தத்தினாலும் நாம் நிச்சயிக்கிறோம். ஆகையினால் சூத்திரர்களுக்கு வைதிகபக்தி இல்லாவிட்டாலும் அவர்கள் தாந்திரிக பக்தியையோ அல்லது ப்ரபத்தியையோ ஏதாவதை அனுஷ்டித்து மோக்ஷம் பெறலாம் என்பதை ஒப்புக் கொள்வதில் ஆக்ஷேபமில்லை. மோக்ஷம் என்னும் ஆத்ம ஸ்வரூபத்திலும் சூத்திரர்களுடைய ஆத்மா வேறுவிதம், ப்ராம்மண ஆத்மா வேறுவிதமென்று ஒப்புக்கொள்ளாததினாலும் மோக்ஷத்தில் தாரதம்மியமில்லாததினாலும் இங்கும் ஒருவித நிர்பந்தமில்லாதல் தாந்திரிகமான பக்தியினால் அல்லது ப்ரபத்தியினாலாவது ச்ரமமில்லாமல் வீடுபெறலாமாகையினாலும், ப்ரபத்தி யென்னும் விஷயத்தை ஸ்ரீ கீதையில் 'மாமேவ யே ப்ரபத்யந்தே' என்றும், 'தமேவ சாத்யம் தாரயாமி' என்றும், 'ஶரணம் ப்ரபத்யே' யென்றும், 'தமேவ



ஶரணமஹம்' என்றும், 'ஶரணம் வ்ரஜ' என்றும் அநேக இடங்களில் விதிக்கையினாலும் கீதையானது த்விஜர்களைக்காட்டிலும் சூத்திரர்களிடமே அதிக பக்ஷபாதமுள்ளது.

4. ஜீவனுக்கு மோக்ஷத்தில் கைங்கர்யமே உள்ளது, ஆநந்தாநுபவம் இல்லையென்பது ஸரியல்ல. தைத்திரீயத்தில் ஜீவன் ப்ரும்மத்துடன் ஸர்வஸுகங்களையும் அநுபவிக்கிறான் என்றும், ப்ரும்மம் ஜீவனை ஆநந்திப்பிக்கிறது என்றும், முண்டக உபநிஷத்தில் ஜீவன் எந்தெந்த இஷ்டங்களை ஆசைப்படுகிறானோ அந்த அந்த இஷ்டங்கள் உண்டாய் அவற்றை அநுபவிக்கிறான் யென்று சொல்வதாலும், சாந்தோக்யத்தில் முக்தன் தான் நினைத்த ஸுகங்களை ஸ்ருஷ்டித்து அனுபவிக்கிறான் என்று விஸ்தாரமாக சொல்வதாலும், ப்ரும்ம ஸூத்திரத்தில் 'ஸங்கல்பாதேவ தத் ச்ருதே:' யென்று இதற்காக ஒரு அதிகரணம் எழுதப்பட்டிருப்பதாலும் கீதையிலும் 'மம ஸாதர்ம்யமாகதா:' (என்னோடு ஸமமான ஸ்வபாவத்தை முக்தர்கள் அடைகிறார்கள்) என்று ஆனந்தரூபனையும் ஆனந்த குணப்ரதனுமிருக்கின்ற ஸர்வேச்வரன் அருளிச்செய்வதாலும், ஜீவனுக்கு ஆனந்த ப்ராப்திதான் மோக்ஷமென்னப்படுகிறது. அதன் பரீவாஹமாக கைங்கர்யம் புருஷார்த்தமாகிறது என்பதுதான் ப்ரமாணஸித்தம்.

5. 8-வது அத்யாயத்தில் இரண்டுவிதமான உபாஸகர்களைச் சொல்லி இவர்களுக்குள் எவர் உயர்ந்தவர் என்று அர்ஜுனன் கேட்டதற்கு ஸமாதானம் சொல்லுமிடத்து, ஒன்றை 'பரமாம் கதிம்' அதாவது உயர்ந்த ஸ்தானமென்று சொல்லி, மற்றொன்றை ஈச்வரன் தன்னுடைய ஸாயுஜ்யத்தை அடைவதாகச் சொல்வதால் உபாஸநமும் ப்ரயோஜனமும் வேறுபட்டதென்று தெரிகிறது. அதாவது ஒன்று ஜீவாத்ம உபாஸனமென்றும் மற்றொன்று பரமாத்ம உபாஸநமென்றும், ஜீவனுடைய உபாஸநத்துக்குக் கைவல்யம் பலமென்றும், பகவதுபாஸநத்துக்கு மோக்ஷம் பலமென்றும் தெரிகிறது.

இதற்காகவே இரண்டிடத்திலும் பயனை சொல்லுமிடத்து 'தத்' யென்கிற பதம், அதாவது கீழ்குறிப்பிட்டதைக் காட்டிலும் வேறுபாட்டை காட்டக்கூடிய சப்தம் கூறப்பட்டிருக்கிறது. ஆகையினால் இரண்டும் ஒரே பயனல்ல.

6. 'மாம் நமஸ்குரு' என்கிற இடத்தில் - 'மாம்' என்கிற பதத்துக்கு 10-வது அத்தியாயத்தில் சொன்னபடி ஈசுவரன் சொத்துக்கள் யென்று அர்த்தம் செய்வதும் அதடியாக சர்வஜந்துக்களையும் நமஸ்கரிப்பது விதிக்கப்படுகிறதென்பதும் அநுசிதம். அந்த அத்தியாயத்தில் 'விஸ்தரேணாத்மநோ யோகம் விபூதிம் ச ஜநார்தந | பூய: கதய' என்றும், 'கதயிஷ்யாமி திவ்யா ஹ்யாத்மவிபூதய: | ப்ராதாந்யத:' என்றும் ஆரம்பித்து ஈசுவரனுடைய சொத்துக்களில் முக்கியமானதைச் சொல்லுவதாகவும் கேட்டதாகவும் தெரிகிறபடியினாலும், முடிவிலும் 'ஸர்வபூதாநாம்

ஹேதுஃ விஸ்ருஷ்டேஸ்திதிஸம்ஹாரயோ' என்று ஐச்வர்யத்தில் சிலவற்றைச் சொன்னதாக முடிப்பதாலும் - உலகமெல்லாம் ஈச்வரனுக்குச் சொந்தமான வஸ்துக்களேயல்லது ஈச்வரனுகமாட்டாது. அப்படியே உத்தவகீதை ச்லோகத்திலும் 'ப்ரணமேத் தண்டவத் பூமாவாச்வசண்டாள கோகரம்' என்பதற்கு அடுத்த வாக்கியமான 'ப்ரவிஷ்டோ ஜீவகலயா ஸர்வம் ஸமவானிதி' என்கிற மேல்வாக்யத்தில் 'ஆச்வசண்டாள கோகரம்' யென்பது அந்வயிப்பதாலும், நமஸ்காரம் ஈசுவரனிடத்தில் அந்வயிப்பதாலும் விரோதமில்லை. அதாவது ஈசுவரன் நாய், சண்டாளன், எருது, கழுதை முதலிய எல்லாவற்றுள்ளும் யெப்போதும் ப்ரவேசித்து இருப்பதால் உயர்ந்தது தாழ்ந்தது யெல்லா வஸ்துக்களிலும் இருக்கிறான் என்று பாவித்து அவனை நமஸ்கரிக்க வேணும் யென்று சொன்னபடி. இப்படி அந்த ச்லோகத்துக்கு அர்த்தம் சொல்லாவிட்டால் 'ப்ரவேசித்தால்' யென்னும் பதத்திற்கு எதை யென்கிற ஆகாங்க்ஷை சாந்தமாகா தாகையினல். 'ஸ்வச்சண்டாளாதி' களுக்கு இந்தவாக்யம் நமஸ்காரத்தை விதிக்க வந்ததல்ல. ஈச்வர பக்தியின் பயனை ஸர்வ வ்யாபியான ஈச்வர ஸாக்ஷாத்காரம் வந்தவனுக்கு நாய் சண்டாளர் முதலான ஜந்துக்கள் தோன்றாது, 'நிற்கின்ற தெல்லாம் நெடுமால்' என்றுதோன்று மாகையினலும் அந்த சமயத்தில் மெய்மறந்து இருக்குமவனுக்கு உலகு தோன்ரு தாகையினல் அவன் யெதை நமஸ்கரித்தாலும் பாதகமில்லை. ஆக "எந்தவிதத்திலும் கீதையானது வர்ணச்ரம தர்மத்திற்கு விபரீதத்தை சொல்லாது. மற்ற சாஸ்திரங்களும் கீதைக்கு விபரீதமாக சொல்லுகிறதில்லை" என்று நிரம்பவும் அமரிக்கையுடன் மிகவும் தெளிவாக யாவரும் அறியும்படி உபந்யஸித்து, இதற்குமேல் ஸ்ரீமான் வீ. கே. இராமானுஜாசாரியர் ஸ்வாமி யேதாவது ஸமாதானம் சொன்னலும் ப்ரதிபதில் சொல்லத்தாம் ஸித்தனுக இருக்கிறதாயும் சொல்லிமுடித்தார்.

பின்பு வீ. கே. இராமானுஜாசார்யர் ஸ்வாமி இரண்டொரு விஷயங்களைப்பற்றிச் சில ஆக்ஷேபனைகளை சொல்ல அதற்கும் புத்தங்கோட்டகம் ஸ்வாமி பதில் அளித்ததும், வீ. கே. இராமானுஜாசார்யஸ்வாமி அதிகதிருப்தியுடன் தம்முடையஸந்தேகங்களுக் கெல்லாம் ஸரியான ஸமாதானம் சொல்லிவந்த அந்தஸ்வாமியை ரொம்பவும் சிலாகித்து பேசினதுடன், ஸபையோர்களும் பிரதி உத்திரம் சொன்ன புத்தங்கோட்டகம் ஸ்வாமியினுடைய ஜ்ஞானத்தையும் யாவரும் அறியும்படி உபந்யஸித்த வார்த்தைகளையும் பொருமையையும் புகழ்ந்து பேசினர்கள்.

எஸ். ராஜகோபாலா சார்யர்,

மன்னர்குடி.

(ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபையின் உப அத்யக்ஷர்)



தோடுகூடின மனதாய், ஆத்மாவை எனக்குச் சேஷபூதனென்றும், என்னால் நியமிக்கப்படுகிறதென்றும், கர்மங்களெல்லாம் என்னுடைய ஆராதனங்களென்றும் அநுஸந்தானம் செய்துகொண்டு வைதிக லௌகிக கர்மங்களைச் செய்பவர்கள் ப்ராசீனமான ஸகல கர்மபந்தங்களினின்றும் விடுபட்டு என்னை அடைகிறார்கள்' என்று விவரித்தார். இங்கு ஸ்ரீ சங்கராசார்யர் 'ஸந்ந்யாஸமும், எனக்கு ஸமர்ப்பித்ததாகச் செய்யும் யோகமும்' என்று வ்யாக்யானம் செய்தது ஸந்தர்ப்பத்துக்கு ஒட்டவில்லை என்பது ஸ்பஷ்டம்.

கீதையானது சில அம்சங்களில் கபிலருடைய ஸாங்க்ய ஸித்தாந்தத்தை அநுஸரித்திருக்கின்றது; அதனுல்தான் இது ஸந்யாஸதர்மத்தை விசேஷமாகச் சொல்லிற்றென்னும் ப்ரமை பலர்க்கிருக்கின்றது. ஸாங்க்ய ஸித்தாந்தத்தின்படி ஸகல கர்மங்களும் குணங்களும் ப்ரக்ருதியைப்பற்றியிருக்கும்; ஆத்மாவுக்கு ஒரு வ்யாபாரமென்பதும் இல்லை; ப்ரக்ருதியின் கார்யங்களைத் தன்னுடையவை யென்று இவன் மயங்குகிருன்; இம்மயக்கம் தீர்ந்து அத்யந்தம் நிர்வ்யாபாரனு யிருப்பதுதான் மோக்ஷம். கீதையிலும் "ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்த்யநாதீ உபாவபி' என்று ஜீவனும் அசேதனமும் நித்யங்கள் என்று துடங்கி குணகர்ம விபாகங்களும் சொல்லப்படுகின்றதையிட்டும், கீழ் விவரித்த ஸாத்விகத்யாகம் உபதேசிக்கப்படுவதி லிருந்தும், இப்படி எண்ணுகிருர்கள். இது தவறு. முதலில், ஸாங்க்ய மதத்தில் ஈச்வரனை ஒப்பவில்லை. ஜீவனைக்கர்த்தா (Active agent) வென்று கொள்வதில்லை. ஜீவனுடைய அனுதிகர்மங்களின் பலனுக பகவந் நியமனத்தால் ப்ரக்ருதியில் அவன் ஸம்பந்தப்படுகிருன் என்பது கீதை உபநிஷத்துக்களின் மதம், 'புருஷஃ ஸுகதுஃகாநாம் போக்த்ருத்வே ஹேதுருச்யதே' (ஜீவன் ஸுகதுக்கானுபவங்களைப் பண்ணுவதற்குத் தானே ஹேதுவாகிருன்) என்று ஜீவனுடைய கர்த்ருத்வமும் (Activity) போக்த்ருத்வமும் Liability to take the consequerces) ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டது. இது ஸாங்க்ய மதத்துக்கு நேர் விரோதமானது.

ஸாங்க்ய சப்தத்துக்குக் கீதையில் 'ஞானம்' அர்த்தமென்பதை வேதாந்திகளான பாஷ்யகாரர்களெல்லாம் அங்கீகரித்திருக்கிருர்கள். இந்தப்பதம் உபயோகப்படுமிடங்களிலெல்லாம் அதற்குப் பொருள் 'ஜ்ஞானநிஷ்டை' அல்லது 'ஜ்ஞானயோகம்' என்றுதான். அந்தந்த ஸந்தர்ப்பங்களுக்குப் பொருந்

தியிருக்கிறது. கீழ்காட்டிய தவறான அபிப்பிராயத்தை 18-வது அத்யாயத்தில் 'பஞ்சைதானி மஹாபாஹோ காரணானி நிபோத மே । ஸாங்க்யே க்ருதாந்தே ப்ரோக்தானி ஸித்தயே ஸர்வகர்மணாம் ॥' (ஸர்வகர்மங்களுடையவும் ஸித்திக்கு ஐந்துகாரணங்களுள வென்று ஸாங்க்யமாகிற சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது) என்று ச்லோகத்தில் 'ஸாங்க்யே க்ருதாந்தே' என்பது மேல்பார்வைக்கு கபிலருடைய ஸாங்க்ய சாஸ்த்ரம் என்று கொள்ளக் கூடும். ஆனால் இந்த ஐந்து காரணங்களாகிய அதிஷ்டானம், கர்த்தா, கரணம், விவிதாஶ்ச ப்ருதக் சேஷ்டா: (ப்ராணவாயுவின் விவிதமான சேஷ்டைகள்), தைவம், என்பவைகளில்ஜீவனாகிற கர்த்தா வேறு; கரணம் (இந்திரியம்) ஆகிற ப்ரக்ருதி கர்த்தாவல்ல; ஸர்வத்துக்கும் ப்ரதானமாயும் நியந்தாவுமானவன் ஈச்வரன் (தைவம்) என்று ப்ரகாசமாய்ச் சொல்லியிருப்பதே இதற்குச் சமாதானம். ஸாங்க்ய தந்த்ரத்தின்படி ஜீவன் ஒருவிதமான வ்யாபாரத்தையும் செய்யத்தகாதவ னல்லவா? ஆகையால் இங்கு 'ஸாங்க்யே க்ருதாந்தே' என்றதற்கு 'யதாவஸ்தித தத்வவிஷயயா வைதிக்யா புத்த்யா க்ருதே ஸம்ஹிதே நிர்ணயே' (உள்ளபடி தத்வங்களை யறிந்த வைதிக புத்தியினால் செய்யப்பட்ட நிர்ணயத்தில்') என்றும் ஸ்ரீபாஷ்யகாரர் வ்யாக்யானம் செய்தார். 'ஸாங்க்ய' என்றால் 'புத்தி' ஸ்ரீசங்கராசார்யரும் 'ஜ்ஞாதவ்யா: பதார்த்தா: ஸங்க்யாயந்தே யஸ்மின் ஶாஸ்த்ரே தத் ஸாங்க்யம், வேதாந்த:' (ஜ்ஞாதவ்யங்களான பதார்த்தங்களைக் கணக்கிட்டுச்சொல்லும் வேதாந்த சாஸ்த்ரத்தில்) என்றே விவரித்தார்.

இப்படியே கீதையில் உபயோகப்படும் யோக சப்தத்துக்கு பதஞ்ஜலி யோகதந்த்ர மென்று கொள்வாருண்டு. அதுவும் அஸங்கதம். யோகமதமானது ஸாங்க்யத்தையே யனுஸரித்தது. ஈச்வரனை மாத்திரம் ஒப்புக்கொண்டது. கபிலமதத்தில், ஜீவன் தத்வவிவேகத்தால் நான் ஒன்றையும் செய்கிறவனல்லன் என்னும் ஜ்ஞானத்தால் ப்ரக்ருதி ஸம்பந்தம்நீங்கிக் கைவல்யத்தை யடைகிறான் என்னப்பட்டது. பதஞ்சலி யோகதந்த்ரத்தில், இந்தக் கைவல்யத்தையடைய ஈச்வரத்யானம் அவச்யம் என்றும், அதுதான் யமநியம ப்ராணாயாமாதிகளோடு கூடின யோகாப்யாஸத்தால் கூடுமென்றும் சொல்லப்படுகின்றது. இங்கும் ப்ரக்ருதி புருஷர்கள் ஈச்வரனுக்கு ஸம்பந்தப்பட்டவைகளாகவாவது அவனால் ஸ்ருஷ்டி ரக்ஷணாதிகளைப் பெறுவதாகவாவது அவன் நிய





னத்துக் குட்பட்டவைகளாகவாவது சொல்லப்படவில்லை. இவையெல்லாம் வேதாந்த நிரூபணங்கள். இவற்றிற்கு நேர்விரோதமாக ஒரு ஈச்வரனை யோகசாஸ்த்ரம் சொல்லிற்று. இதை கீதை எப்படி அனுஸரிக்கும்? 'யோக' என்பது கீதையில் முதலில் கர்மயோக மென்னும் அர்த்தத்தில் உபயோகப்பட்டிருக்கிறது. இதை 'ஏஷா தேऽபிஹிதா ஸாங்க்யே புத்திர்யோகே த்விமாம் ஶ்ருணு' (ஞானநிஷ்டையிலிருக்க வேண்டிய புத்தியைச் சொல்லியாயிற்று; இனி கர்மநிஷ்டையில் இருக்க வேண்டிய புத்தியைக் கவனித்துக் கேள்) என்னும் ச்லோகத்தில் கண்டு கொள்வது. மீண்டும் 'யோகஸ்த: குரு கர்மாணி ஸங்கம் த்யக்த்வா தனஞ்ஜய' (தனஞ்சயனே, ஸங்கத்தைவிட்டு யோகத்திலிருந்து கருமங்களைச்செய்) என்றதில் யோகசப்தத்துக்கு 'ஸித்த்யஸித்த்யோ: ஸமோ பூத்வா ஸமத்வம் யோக உச்யதே' என்பதினால், 'ஸித்தி அஸித்திகளினால் மாறாத ஸமபுத்தியைக் காட்டும் சித்தஸமாதானம்' என்று அர்த்தம் விளங்குவதை ஸ்ரீபாஷ்யகாரர் காட்டியருளினார். இவ்விஷயத்திலும் ஸ்ரீசங்கரர் 'ஸித்த்யஸித்த்யோ: ஸமோ பூத்வா' என்பதையே 'ஸ ஏவ ஹி யோக உக்த:' (அதுதான் நான் சொன்னயோகம்) என்று பகவத் வசனத்தை உபபாதித்தார். 'யோக: கர்மஸு கௌஶலம்' (கர்மங்கள் செய்வதில் இந்த புத்தியுடன் செய்வதுதான் பந்த நிவ்ருத்தியுடன் செய்கிற ஸாமர்த்தியம்). அதாவது 'பற்றைவிட்டு ஜயாபஜயங்களிலும் ஒரேமாதிரியிருக்கும் புத்தியோகத்துடன் செய்யும் கர்மங்கள் யாவும் பந்தஹேதுவாகா' என்று அடுத்தாற்போல் உபதேசிக்கப்பட்டது. இப்படியே 'ஜ்ஞானயோகேன ஸாங்க்யானாம் கர்மயோகேன யோகினாம்', 'ஏகம் ஸாங்க்யம் ச யோகம் ச ய: பஶ்யதி ஸ பஶ்யதி' என்பதுபோல் சொல்லுமிடங்களி லெல்லாம் தாத்பர்யங்கொள்ள வேண்டும்.

இதுவரையில் கீதையின் நிஷ்காம்ய கர்மத்தை இன்னபடிசெய்ய வேண்டுமென்றுரைத்திருப்பதை விமர்சித்தோம். இப்படிச்செய்வதின் பரமபலம் யாதென்பதையும் அறியவேண்டும். ஸர்வகர்ம நிவ்ருத்தி ரூபமான ஸந்யாஸம் அல்லது 'நானே ஸர்வபூதங்களுக்குள்ளும் இருக்கும் ஆத்மா, நானே ஈச்வரன், என்னைவிடவேறொன்றுமில்லை, வேறுஎன்று தோன்றுவதெல்லாம் மாயை என்ற ஜ்ஞானத்தால் ப்ரும்மமாய்விடுவது தான் மோக்ஷம்' என்பது ஸ்ரீசங்கராசார்யர் கீதையில் ப்ரதிபாதித்தபொருள். இவர்மதம் ப்ரும்ம ஸூத்ரங்களுக்குப் போலவே கீதையின் உபதேசங்களுக்குப் பொருந்தவில்லை என்பது பண்டார்கர்,

தத்வபூஷணர் முதலிய ஆதுநிகர்களுடையவும் நிஷ்கர்ஷம். பகவத் விபூதிகளைச் சொல்லும் 10-வது அத்யாயம், அவைகளை விச்வ ரூபத்தில் காட்டும் 11-வது அத்யாயம், இவ்விபூதிகளையுடைய ஸர்வேச்வர விஷயத்தில் பக்தியை உபபாதிக்கும் 12-வது அத்யாயம், பத்த முக்த நித்யர்களான சேதனர்களை விட வேறான புருஷோத்தமனை நிரூபிக்கும் 15-வது அத்யாயம், சரணாகதியைவிதிக்கும் சரமச்லோகம் முதலியவை இவர்மதத்துக்கு விரோதிக்கும். பகவதவதாரங்களெல்லாம் உண்மைகளென்று 4-வது அத்யாயத்தில் விரித்துரைத்த அவதார ரஹஸ்யம் அவருக்குப்ரயோஜனமில்லை. பகவானுடைய உபதேச ஆரம்பத்திலேயே ஜீவன் வேறு, ஈச்வரன்வேறு; சேதனர்களும் பலர்; இவர்களும் ப்ரபஞ்சங்களும் எல்லாம் உண்மையானவைகள்; பகவான் உபதேசகன், ஆராத்யன்; ஜீவனை அர்ஜ்ஜுனன் சிஷ்யன், ஆராதிப்பவன்; என்று சொல்வதை ‘ நத்வேவாஹம் ’ என்னும் ச்லோகத்தின் பாஷ்யத்தில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நம் உடையவர் விளக்கியருளினர். பகவத்ப்ராப்தி என்பதும் ப்ரும்ம ஐக்யமல்ல; ப்ரும்மத்துக்கு ஸமான தசையை யடைதல் என்பதும், ‘ இதம் ஜ்ஞாநமுபாச்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா: என்றதில் ஸ்பஷ்டமாயிற்று. ‘ கீதையை உபதேசித்த பரம்ப்ரும்மம் என்பது ‘ நிர்விசேஷ ஜ்ஞாநம் ’ (வெறும் ஞானம்) ஆனால் கீதை யென்னும் க்ரந்தம் நிர்மாணமாவதுகூட ஸாத்ய மில்லையே ’ என்றார் தத்வபூஷணர்!

மதுஸூதந ஸரஸ்வதி யென்பவர் ஸ்ரீசங்கரரை யனுவர்த்தித்தவர். 6 அத்யாயங்களடங்கிய முதல் ஷட்கத்தில் கர்மநிஷ்டையும், கடைசி ஷட்கத்தில் ஜ்ஞானநிஷ்டையும், மத்யம ஷட்கத்தில் பரஸ்பர விருத்தங்களான இந் நிஷ்டைகளில் ஸம்பந்தப்பட்ட பக்தி நிஷ்டையும் சொல்லியிருப்பதாகவும், பக்தி நிஷ்டையானது இப்படி கர்ம மிச்ரமாயும் ஞானமிச்ரமாயும் சுத்த ரூபமாயும் இருக்கிறதென்றும், வேதாந்தத்தில் ஜீவ ஈச்வரர்களுடைய ஐக்யத்தைக்காட்டும் ‘ தத்வமஸி ’ (அதுதான் நீயாயிருக்கிறாய்) என்னும் வாக்யத்தில் ‘த்வம்’ (அதாவதுஜீவன்) என்பதை முதல் ஷட்கத்திலும், ‘தத்’ (அதாவது ப்ரும்மம்’ என்பதில் பொருளை இரண்டாவதிலும், ‘அஸி’( ஆகிறாய்) என்று இவர்களின் ஐக்யத்தை மூன்றாவதிலும், வேதமானது கர்மம், உபாஸ்தி, ஜ்ஞாநம், என்று மூன்று காண்டங்களாகப்பிரித்துச் சொன்னதுபோல், கீதையும் பிரித்துச் சொல்லிற்றென்றும் இவர் உபபாதிக்கின்றார். இவர் உரைப்பதாவது:—‘ தத்ர து ப்ரதமே காண்டே கர்மதத்த்யாகவர்த்மநா । த்வம்பதார்த்தோ விசுத்தாத்மா ஸோபபத்திர்நிரூப்யதே ॥ த்விதீயே பகவத்பக்திநிஷ்டாவர்ணநவ



ர்த்மநா । பகவாந் பரமாநந்த: தத்பதார்த்தோவதார்யதே । த்ருதீயே து தயோரைக்யம் வாக்யார்த்தோ வர்ண்யதே ஸ்புடம் । ஏவமப்யத்ர காண்டாநாம் ஸம்பந்தோஸ்தி பரஸ்பரம் ॥ (முதல் ஷட்கத்தில் கர்மத்தையும் த்யாகத்தையும் சொல்லி ‘ த்வம் ’ பதத்தின் பொருளாகிய பரிசுத்த ஆத்மஸ்வரூபம் நிரூபிக்கப்பட்டது; இரண்டாவதில் பகவத்பக்தி நிஷ்டையை வர்ணித்துப் பரமானந்தஸ்வரூபனான பகவான் அறிவிக்கப்பட்டார்; மூன்றாவதில் இவர்களின் ஐக்யம் வாக்யார்த்தங்களினால் ஸ்புடமாக வர்ணிக்கப்பட்டது ’-என்று. இதில் முதல் இரண்டு ஷட்கங்களினுடைய அர்த்த நிரூபணத்தை ஒருவாறு அங்கீகரிக்கலாம்; ஆனால் மூன்றாவதில் ஐக்யோபதேசம் என்பது கீதையின் மூலத்துக்குப் பொருந்தவே பொருந்தாது; மேலும் ‘ உத்தம: புருஷஸ்த்வந்ய: ’ (புருஷோத்தமன் எனப்படுமவர் வேறு) என்பது முதலியப்ரகரணங்களுக்கு நேராகவிரோதிக்கும். கவனித்துப்பார்த்தால் அத்வைதவாதிகளுக்கெல்லாம் கீதோபதேசம் 9 அத்யாயங்களுக்குள் முடிவடைந்து விட்டதென்னலாம். அத்வைதம் தான் வேதாந்தமென்று ஐரோப்பியா ஸம்ஸ்க்ருத வித்வான்கள் நினைத்திருந்த முன்காலத்தில் கீதையின் மூன்றாவது ஷட்கம் அதைச் சேர்ந்ததல்ல வென்றும் பிற்காலங்களில் யாரோ சேர்த்துவிட்டபாகம் என்றும் சிலர் சொல்லி வந்தார்கள்! அது நல்ல வேளையாய் இப்போது மாறி விட்டது.

ஸ்ரீபாஷ்யகாரர், பூர்வாசார்யர்களான ஸ்ரீஆளவந்தார்ப்ரப்ருதிகள் காட்டின வழியை யவலம்பித்து கீதையின் தாத்பர்யத்தை முன்பின் ஸங்கதிகளையும், ஆரம்பம் முடிவுகளையும், ப்ரகரணங்களையும் அனுஸரித்து ஏற்படுகிறபடி அர்த்தங்கள் சொல்லியிருப்பதைக் கீழே கண்டோம். இதையனுஸரித்தே கீதையில் சொல்லப்பட்ட பரம பலமின்னதென்று நிஷ்கர்ஷிக்கும் ப்ரகாரத்தை மூன்றாவது அத்யாய ஆரம்பத்திலேயே கீதையின் அமைப்பைக் கொண்டே நிரூபிக்கிறார். அதாவது, வேதாந்தங்களின் தோஷகந்தமில்லாத' எல்லையில்லாஞானம் ஒன்றுப்போல் அநவதிக அதிசய அஸங்க்யேய கல்யாண குணகணனை புருஷோத்தமனை பரப்ரும்மத்தை யடைவதாகிய மோக்ஷத்தை விரும்புகிறவர்கள் அனுஷ்டிக்க வேண்டிய‘ த்யானம், ’ ‘ உபாஸனம் ’ என்று சொல்லப்படும் பக்தி யோகத்தை உபதேசிக்குமுன், அதற்கு அங்கமாக, சாந்தோக்யத்தில் ப்ரஜாபதிவாக்யம், கடவல்லி, தைத்திரீயம் முதலியஉபநிஷத்துகளின் க்ரமத்தை யனுஸரித்து, ப்ராப்தாவான ஜீவனுடைய யாதாத்ம்யமும், அதை ஸாக்ஷாத்கரிக்கும் ப்ரகாரமும், இதற்கு ஸாதகமாக ஆத்மா நித்யன் என்றுணர்ந்து பற்றற்றகர்மாநுஷ்டானங்களைச் செய்வதையும் கீதைசொல்ல உபக்ரமித்து மேல் 4 அத்யாயங்

ளால் ஜீவாத்ம தர்சனத்தையும் அதையடையும் ஸாதனங்களையும் வெளியிடுகிறது' என்று ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்குபயோகமான நித்யாத்மஸ்வ ரூபத்தையும், உபாயங்களான கர்மயோகம் ஞானயோகம் என்னும் நிஷ்டைகளையும், இவைகளுக்கு யுக்தமாய் அவர்ஜ்ஜநீயமா யிருக்கும் பற்றற்ற கார்மானுஷ்டானங்களையும், முதல் ஷட்கம் சொல்லிற்று. இப்படி ஞானயோகம் கர்மயோகம் இவைகளினால் ஆத்மதர்சனம் பெற்று அந்தர்யாமியான பகவானையடைய உபாயமாகிற பக்தியோகம் இரண்டாவதில் கூறப்பட்டது. இப்படி இரண்டு ஷ[illegible]ளாலும் சொல்லப்பட்ட அர்த்தங்களுக்கு அவச்யமாய் அறியவேண்டிய [illegible]ரின் சேஷபூதங்களான ப்ரக்ருதி, புருஷன், இவர்களைவிட அந்ய[illegible]ச்வரன், கர்மபந்தம், ஞானம், பரபக்தி முதலியவைகள் மூன்றாவது ஷட்கத்தில் சொல்லப்படுகின்றன வென்று ஸ்ரீ ஆளவந்தார் ஸங்க்ரஹித்ததையடியொத்தி ஸ்ரீ உடையவர் பாஷ்யம் முழுவதும் அவதரித்தது. இதை இங்கு விஸ்தரிப்பது ஸாத்யமல்ல. ஆகையால் '[illegible]' என்று ஸ்ரீ[illegible] ஸங்க்ரஹத்தில் இவர் ஸாதித்திருப்பதை கீதாசாஸ்த்ரத்தினுடையவும் ஸாரமென்று விஜ்ஞாபித்து இங்கு ஸங்க்ரஹித்து இந்த விஷயத்தை முடிக்க வேண்டுகிறேன். அதெங்ஙனே யென்றால் :—

[illegible] ॥' (ஜீவாத்மாக்கள் ஸ்வபாவத்தில் ஜ்ஞானம் குன்றாதவர்கள், அளவில்லாத ஜ்ஞானத்தை ஸ்வரூபமா யுடையவர்கள். ஆயினும் கர்மங்களாகிய அவித்யையினால் மூட்டமுண்டு அவரவர்கள் முன்செய்த கர்மத்துக்கீடாக ஞானக்குறைவை அடைகிறார்கள். இதனால் ப்ரும்மதேவன் முதல் மரம்வரையிலுள்ள தேஹங்களில் படைபடுகிறார்கள். அந்தந்த தேஹத்துக்கு உசிதமாய் அவரவர்களுடைய ஜ்ஞானம் பரவுகிறது. அதனால் அந்தந்த தேஹங்களையே ஆத்மாவென்று அபிமானித்து அந்த அபிமானத்திற்குத் தகுந்த கர்மங்களை மீண்டும் செய்து ததனுகுணமாய் ஸுகதுக்க ரூபங்களான போகங்களை யனுபவிக்கிறதாகிய ஸம்ஸார ப்ரவாஹத்தில் நுழைகிறான். இந்த ஸம்ஸாரம் நீங்குவதற்கு பகவானிடத்தில் சரணாகதி செய்வது தவிரவேறு மார்க்கமில்லை. ஆகையால் சாஸ்த்ரங்கள் முதலில் ஜீவர்கள் தேஹம் முதலிய ஸம்பந்தங்களற்ற ஜ்ஞானமொன்றையே தமது ஸ்வரூபமாக வுடையவர்களாதலின அவர்களெல்லாம் ஒரேமாதிரியானவர்கள் என்றுப்ரதிபாதித்தன. அந்தஜ்ஞானஸ்வரூபமும் பகவானுக்குச் சேஷபூதம் என்னும் குறிப்பான ப்ரகாரத்தையே உடையது ; பகவானுக்குச் சரீரபூதமாகவிருப்பது என்பதையும், பகவத்ஸ்வரூபமும் ஹேயங்களென்னும் படியான ஸகல வஸ்துக்களையும் விடவேறானதாய் கல்யாணகுணங்களுக்கெல்லாம் ஒரே இருப்பிடமாய்த்தன் ஸங்கல்பத்தால் ஸமஸ்த சேதனா சேதனங்களையும் அவைகளுக்குள் அந்தராத்மாவாக இருந்து நியமிக்கும்படியிருப்பதையும், இந்த சாச்வதமான நிலையையடைவதற்கு உபாயமாய்க் கர்ம யோகாதிகளை அங்கமாயுடைய பக்திரூபமான உபாஸநத்தையும் சாஸ்த்ரங்கள் விரித்தன' என்று.

இப்படி உபதேசங்களைக்கேட்ட அர்ஜுனன், முதலில் தேஹாத்ம விவேகக்குறைவினால் இதுபுண்யம் இதுபாபம் என்னும் நிஷ்கர்ஷமின்றிக் கேவலம் உறவு முறையாரிடத்தன்பினால் கலங்கி ஸ்வதர்மமாகிய யுத்தத்திலிருந்து திரும்பினவன், பிறகு மோஹந்தெளிந்து ஸ்திரபுத்தியுடன் [illegible]மான தன் ஆச்ரம தர்மானுஷ்டானத்தில் ப்ரவ்ருத்தித்தபடியை நினைத்து உலகத்தாரனைவரும் அஜ்ஞான அஹங்காராதிகளை யகற்றித் தங்கள் தங்களுக்கு விஹிதங்களானவும் லோகோஜ்ஜீவன பூதங்களானவும் கர்மங்களை பகவதாராதனங்கள் என்று நினைத்து சக்திவஞ்சனை யின்றிச் செய்தால், அதனால் ப்ரீதனான பகவான் தானும் பரமானந்த ஸ்வரூபனாகையால், அவர்களுக்கும் நிரதிசயாநந்த ரூபமான மோக்ஷபர்யந்தமாக அபேக்ஷிதங்களைக் கொடுப்பான் என்று கீதையில் பரம புருஷார்த்த உபதேசம் சொல்லிற்றாயிற்று. இதையே மனுவானவர் '[illegible] ॥' (வேதத்தில் விதிக்கப்பட்ட ஸ்வ வர்ணாச்ரமதர்மத்தை நாள்தோறும் அயர்வின்றிச் செய்யக்கடவர். அதைச் சக்தியுள்ள வரையில் செய்கிறவனே உத்தமமான பதவியை[illegible]வான்) என்றுரைத்தார்.

[illegible]

கீதாபாஷ்யங்களநேகங்களையும் விமர்சித்துக்கடைசியில் ஸ்ரீதேசிகன், "நூற்றுக்கணக்கான பாஷ்யகாரர்களும் தங்கள் தங்கள் மதங்களையனுசரித்துச் செய்திருக்கும் வ்யாக்யானங்களிலெல்லாம் ([illegible]) நிர்விவாதமாக பரிக்ரஹித்தஸார அர்த்தமென்னவென்றால் '[illegible]' (ஸ்ரிய: பதியாகிய பகவானே பரதத்வம், அவனே அநந்ய கதியாகச் சரணம் புக்கு அவரவர்கள் அதிகாரத்துக்குத் தக்கபடி அவனே ஆச்ரயிப்பதே பரம தர்மம்) என்பது", என்று அருளிச் செய்தார்.

கீதசாஸ்த்ரம் வேதத்தை யடியொத்தியது. இதில் வேதத்தையும் யாகங்களையும் நிந்தித்திருப்பதாக எண்ணுவது ஸம்ப்ரதாயமான அர்த்தங்களை யறியாமையால் உண்டாவது. அவைகளெல்லாம் பரமபுருஷனுடைய ஆராதனரூபங்கள் என்னும் அபிஸந்தியுடன் செய்யாமல், கேவலம் அக்கருமங்களே வேண்டிய பலன்களைக் கொடுக்கின்றன என்று விவேகக்குறைவினால் சொன்னதை மாத்திரம் இச்சாஸ்த்ரம் கண்டித்தது. இதனாலேயே இக்காலத்திய ஆசாரக்குறைவுகளுக்கும், வர்ணாச்ரம தர்மங்களைக்குலைக்கும் அபிஸந்திக்கும் கீதையில் ஆதாரமிருக்கிற தென்னலாகாது. ஸ்வதர்மானுஷ்டானத்தையே விடமுடியாதென்று கீதைவற்புறுத்திற்று. இதைப்ரதானமாக அறிந்து இதற்கனுகுணமாக கீதையின் தத்வார்த்தங்களை லோக வ்யவஹாரங்களிலும் ஸர்வஜன ஸௌக்யத்துக்காகச் செய்யும் ப்ரவ்ருத்திகளிலும் அன்வயிப்பது ச்லாக்யம் என்பது, லௌகிக வ்யாபாரங்களி லிருப்பவர்க ளறியவேண்டும். கீழ்உதாஹரித்த, ஆயாநிகர்களுடைய ஸம்ஸ்காரங்களையும் ஸம்ஸர்க்கங்களையும் உலகப்போக்கையுமனுஸரித்து, வைதிகர்களும் தேசவாழ்வில் தாங்களும் ஸம்பந்தப்பட்டவர்களாகக் கருதி, சாஸ்த்ரார்த்தங்களின் உண்மைகளை மற்றவர்களுக்குச் சுணையடங்கச் சொல்லி ஸநாதன தர்மரக்ஷணத்தில் தங்கள் அம்சத்தையும் தாராளமாய் வஹிக்கவேண்டும். இப்படி இருதிறத்தாரும் ஒத்துழைத்தால் '[illegible]' என்று கீதாசார்யனுடைய அனுக்ரஹத்துக்குப் பாத்ரர்களாய்ஸர்வவித புருஷார்த்தங்களையும் ஸ்ரீவைஷ்ணவர்கள் பெறுவார்கள் என்பது திண்ணம்.

[illegible] ।
[illegible] ॥

லோகஹிதத்தையே கருதிப்ரவ்ருத்தித்த ஸ்ரீராமானுஜருடைய திவ்யாஜ்ஞையானது திக்கெட்டிலும் பரவி மேன்மேலும் செழித்தோங்குமாக.

முற்றிற்று.

186714

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ. உப. | ராவ். பஹதூர் டி. நம்பெருமாள் செட்டியார், சென்னை | 5 | 0 | 0 |
| ,, | எம். ஸ்ரீனிவாஸாசாரியர், மைலாபூர் ... | 8 | 0 | 0 |
| ,, | எஸ். ஜி. ராகவாசாரியர், காஞ்சீபுரம் ... | 5 | 0 | 0 |
| ,, | எஸ். கோபாலஸாமி அய்யங்கார், மைலாபூர் ... | 8 | 0 | 0 |
| ,, | டி. வி. நீலமேகாசாரியர், கீழ்பாக்கம் ... | 5 | 0 | 0 |
| ,, | டி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார், டில்லி ... | 3 | 0 | 0 |
| ,, | டி. டி. ராமஸ்ஸாமி நாயடு, கும்பகோணம் ... | 8 | 0 | 0 |
| ,, | வி. ராமானுஜாசாரியர், மாயவரம் ... | 3 | 0 | 0 |
| ,, | ஏ. வெங்கடாசல முதலியார், திருவண்ணாமலை ... | 8 | 0 | 0 |
| ,, | ஏ. ஆர். லக்ஷ்மிநரஸிம்ம அய்யங்கார், தஞ்சாவூர் ... | 3 | 0 | 0 |
| ,, | கே. ரங்கஸாமி அய்யங்கார், தசாஞ்ஜூர் ... | 3 | 0 | 0 |
| ,, | ஏ. ராகவசாரியர், கும்பகோணம் ... | 8 | 0 | 0 |
| ,, | கே. வீரராகவா அய்யங்கார், நாமக்கல் ... | 3 | 0 | 0 |
| ,, | ஆர். ராமஸ்ஸாமி அய்யங்கார், மதுரை ... | 8 | 0 | 0 |
| ,, | என். ஆர். கிருஷ்ணஸ்ஸாமி அய்யங்கார், மதுரை ... | 5 | 0 | 0 |
| ,, | வேதவாத்தியார் இரங்காசாரியர். ஸ்ரீரங்கம் ... | 3 | 0 | 0 |
| ,, | ஏ. சேஷாசாரியர், சிந்தாத்திரிபேட்டை ... | 8 | 0 | 0 |
| ,, | என். கிருஷ்ணஸாமி, அய்யங்கார் கரூர் ... | 8 | 0 | 0 |
| ,, | எம். பி. நரஸிம்மாசாரியர், மதுராந்தகம் ... | 8 | 0 | 0 |
| ,, | எஸ். ஆர். தேசிகாசாரியர், ஸ்ரீவைகுந்தம் ... | 5 | 0 | 0 |
| ,, | பி. கே. ரங்கஸாமி அய்யங்கார், புலியூர் ... | 8 | 0 | 0 |

**ஏப்பிரல் மாதத்திய சந்தா வரவு ஜாபிதா.**

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ. உப. | வி. ஆர். வீரராகவ அய்யங்கார், கும்பகோணம் ... | 1 | 8 | 0 |
| ,, | டி. ராமஸ்ஸாமி அய்யங்கார், அம்மாபேட்டை ... | 8 | 0 | 0 |
| ,, | ஆர். கிருஷ்ண அய்யங்கார், செங்குறிச்சி ... | 3 | 0 | 0 |
| ,, | ஆர். ஸ்ரீனிவாஸராகவ அய்யங்கார், புரசைவாக்கம் ... | 5 | 0 | 0 |
| ,, | எம். ராமஸ்ஸாமி அய்யங்கார், கும்கோணம் ... | 2 | 0 | 0 |
| ,, | கே. வி. எஸ். அனந்ததேசிகாசாரியர், புதுச்சேரி ... | 3 | 0 | 0 |
| ,, | டி. டி. ரங்காசாரியர், திருவள்ளூர் ... | 5 | 0 | 0 |
| ,, | பி. கே. கருடாசாரியர், பெங்களூர் ... | 5 | 0 | 0 |
| ,, | வி. சேஷ அய்யங்கார், கோயமுத்தூர் ... | 3 | 0 | 0 |
| ,, | கே. கிருஷ்ணமாசாரியர், மைலாப்பூர் ... | 2 | 0 | 0 |
| ,, | பி. ரெங்கஸாமி அய்யங்கார், செங்கல்பட்டு ... | 3 | 0 | 0 |
| ,, | ஏ. இராமானுஜாசாரியர், கூடலூர் ... | 5 | 0 | 0 |
| ,, | வி. ஸ்ரீனிவாஸாசரியர், சிந்தாத்திரிபேட்டை ... | 1 | 8 | 0 |
| ,, | என். எஸ். வரதாசாரியர், எழும்பூர் ... | 3 | 0 | 0 |
| ,, | ஏ. சேஷாத்திரி அய்யங்கார், கடப்பை ... | 3 | 0 | 0 |
| ,, | டி. எம். வெங்கட்ராகவாசாரியர், வெல்லூர் ... | 3 | 0 | 0 |
| ,, | எஸ். இராமானுஜ ஐயங்கார், மைலாப்பூர் ... | 3 | 0 | 0 |
| ,, | எம். ஆர். ஸ்ரீனிவாஸ அய்யங்கார், கோலாப்பூர் ... | 8 | 0 | 0 |
| ,, | ஸி. பரவாஸுதேவ அய்யர், கிருஷ்ணகிரி ... | 3 | 0 | 0 |
| ,, | ஸி. சேஷாசாரியர், பெங்களூர் ... | 5 | 0 | 0 |
| ,, | வி. ராகவ அய்யங்கார், கரூா ... | 3 | 0 | 0 |
| ,, | கே. ஆர். ஸ்ரீனிவாஸாசாரியர், தனுஷ்கோடி ... | 3 | 0 | 0 |
| ,, | ஏ. நாராயண அய்யங்கார், தஞ்சாவூர் ... | 3 | 0 | 0 |
| ,, | ஆர். வி. கிருஷ்ணமாசாரியர், கும்பகோணம் ... | 5 | 0 | 0 |

(இன்னும் வரும்.)

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, சென்னப்பட்டணம்

## போஷகர்கள்.

1\. ஸ்ரீ. உ.ப. ஆனரெபில் கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், மயிலாப்பூர்.
2\. " " கே. வி. ரங்கஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீரங்கம்.
3\. " " திவான்பஹதூர், டி. டி. ரங்காசார்யர்.

## எக்ஸிக்யுடிவ் போர்ட் மெம்பர்கள்.

*1. ஸ்ரீ. உ.ப. ராவ்பஹதூர், எஸ். ராமஸ்வாமி ஐயங்கார்—ஸபாத்யக்ஷர்.
2\. " வ. வெ. ஸ்ரீனிவாஸ ஐயங்கார். } ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள்.
3\. " எஸ். ராஜகோபாலாசாரியர் } ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள்.
*4. " ஸ்ரீ. வாஸுதேவாசார்யர். } ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள்.
5\. " டி. கோதண்டராம ஐயங்கார், தஞ்சாவூர். } கார்யதர்சிகள்.
*6. " பி. ஆர். கிருஷ்ணஸ்வாமிஐயங்கார், எழும்பூர் } கார்யதர்சிகள்.
*7. " கோமடம் எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்கார்—உதவி கார்யதர்சி.
*8. " என். ஸ்ரீனிவாஸாசார்யா, புரசைபாக்கம்—தீபிகைபத்ராதிபர்.
9\. " டி. நரஸிம்ம ஐயங்கார், திருவல்லிக்கேணி.
10\. " டி. அநந்தாசார்யர், வேலூர்.
11\. " ஏ. வி. கோபாலாசார்யர், திருச்சிறுப்பள்ளி.
12\. " எஸ். பாட்ராசார்யர், மன்னார்குடி.
13\. " குமார சக்ரவர்த்தி ஐயங்கார், எல்லூர்.
14\. " வெ. ஈ. சின்னஸ்வாமி ஐயங்கார், செங்கல்பட்டு.
15\. " ஆர். நரஸிம்ம ஐயங்கார், மாதவபுரம்.
16\. " கே. ஏ. வீரராகவாசார்யர், மதிராஸ்.
17\. " டி. இ. சடகோபாசார்யர், கூடலூர்.
18\. " வி. துரைஸ்வாமி அய்யங்கார், சித்தூர்.
19\. " ராவ் பஹதூர் என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கும்பகோணம்.
20\. " எஸ். டி. கிருஷ்ண அய்யங்கார், மதுரை.
21\. " பி. கே. கருடாசார்யர், மைஸூர்.
22\. " டி. ரங்கஸ்வாமி ஐயங்கார், சைதாப்பேட்டை.
23\. " ராவ் ஸாஹிப் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர்.
24\. " எஸ். வரதாசார்யர், மயிலாப்பூர்.
25\. " வித்தியாபூஷணம் எ. கோவிந்தாசார்யர், மைஸூர்.
26\. " வி. கோபாலாசாரியார், பூந்தமல்லி.
27\. " வி. பத்மநாப ஐயங்கார், மயிலாப்பூர்.
28\. " எஸ். ஸுந்தரராஜ ஐயங்கார், மயிலாப்பூர்.
29\. " என். ராஜகோபாலாசார்யர், "
30\. " எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கோமல்.
31\. " எஸ். வேதாந்தாசார்யர், திருவையாறு.
32\. " வித்வாந். ஆர். வி. கிருஷ்ணமாசார்யர், திருக்குடந்தை.
33\. * " வித்வாந். செட்லூர் நரஸிம்மாசார்யர், புரசைபாக்கம்.
34\. " வி. தேசிகாசார்யர், புரசைபாக்கம்.
35\. * " எம். எஸ். கிருஷ்ணமாசார்யர், புரசைபாக்கம்.
36\. * " ம. வி. நீலமேகாசாரியர், புரசைபாக்கம்.
37\. " எஸ். ஆர். தேசிகாசாரியர், ஸ்ரீவைகுண்டம்.
38\. * " ஆர். ஸ்ரீநிவாஸராகவாசார்யர், புரசைபாக்கம்.
39\. " கே. டி. பார்த்தஸாரதி அய்யங்கார், வேலூர்.
40\. " டி. ஈ. பார்த்தஸாரதி அய்யங்கார், நாமக்கல்.

(உள்புறம் பார்க்கவும்.)